# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,*
## *நிகழ்நிலைக் காப்புச் சட்டம்*

---

[*2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024*, பெப்புருவரி மாதம் 02 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *120.00*** **தபாற் செலவு : ரூபா *150.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,**
**நிகழ்நிலைக் காப்புச் சட்டம்**

[*2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 34/2021*

***நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; நிகழ்நிலை மூலமாகச் செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட கூற்றுக்களுக்கெதிரான காப்பை வழங்குவதற்கும்; தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகள் மற்றும் மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்குகளின் பயன்பாட்டைத் தடுப் பதற்கும்; இலங்கையில் தடைசெய்யப்பட்ட நோக்கங்க ளுக்காக பயன்படுத்தப்படும் நிகழ்நிலை அமைவிடங் களை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; தடைசெய்யப்பட்ட கூற்றுக்களின் தொடர்பாடலுக்கு நிதியளித்தல் மற்றும் வேறு ஆதரவை ஒடுக்குவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றின் போது ஏற்புடையனவாதல் வேண்டும்- இச்சட்டத்தின் ஏற்புடைமை

(அ) ஆளொருவர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே சமூகமாயிருக்கையில் இலங்கைப் பிரசை ஒருவர் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றவிடத்து;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதன் மூலம் அரசுக்கு அல்லது இலங்கையில் வதிவுள்ள ஆளொரு

வருக்கு இலங்கையினுள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே இழப்பு, சேதம் அல்லது தீங்கொன்று விளைவிக்கப்படுகின்றவிடத்து; அல்லது

(இ) இச்சட்டத்தின் கீழான தவறொன்று, எவ்விடத்தில் புரியப்பட்டிருப்பினுஞ்சரி இலங்கைப் பிரசை ஒருவராக வுள்ள ஆளொருவரினால் புரியப்படுகின்றவிடத்து.

இச்சட்டத்தின் குறிக்கோள்கள்

**3.** இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக தடைசெய்யப்பட்ட கூற்றுக்களின் தொடர்பாடலினால் விளைவிக்கப்படும் தீங்கிற்கு எதிராக ஆட்களைப் பாதுகாத்தலும்;

(ஆ) நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கச்சார்பின்மையின் பேணுகைக்குப் பங்கமாகவுள்ள கூற்றுக்களின் தொடர்பாடலிலிருந்தான பாதுகாப்பை உறுதிப்படுத்துதலும்;

(இ) இச்சட்டத்தின் கீழான தவறுகளைப் புரிவதற்காக நிகழ்நிலை கணக்குகள் மற்றும் தன்னியக்கச் செய்நிரல்களின் துர்ப்பிரயோகங்களுக்கு எதிராக அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான, தடுப்பதற்கான மற்றும் பேணிக்காப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப் படுத்துதலும்; அத்துடன்

(ஈ) நிகழ்நிலைக் கணக்கொன்று என்ற வகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக இலங்கையில் தடைசெய்யப்பட்ட கூற்றுக்களை மீண்டும் மீண்டும் அறிவிக்கின்ற நிகழ்நிலை அமைவிடங்களுக்கு நிதியளித்தல், அவற்றை மேம்படுத்தல் மற்றும் வேறு ஆதரவைத் தடுத்தலும்.

பாகம் I

**நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவைத் தாபித்தல்**

*நிகழ்நிலைக் காப்பு ஆணைக் குழுவைத் தாபித்தல்*

**4.** (1) (இதனகத்துப்பின்னர், "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழு என அழைக்கப்பட வேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறாவழியுரிமையுடனும் பொது இலச்சினையொன்றுடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

*ஆணைக் குழுவின் உறுப்பினர்களின் நியமனம்*

**5.** (1) ஆணைக்குழு, தகவல் தொழில்நுட்பவியல், சட்டம், ஆட்சி, சமூகசேவைகள், ஊடகவியல், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல் அல்லது முகாமை ஆகிய துறைகளின் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்ட ஆட்களிடமிருந்தான, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கு அமைய, சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டிய ஐந்து ஆட்களின் பெயர்களை அங்கீகாரத்துக்காக அரசியல.மைப்புப் பேரவைக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

(3) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட் காலப்பகுதியொன்றினுள்,

ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக (2) ஆம் உட்பிரிவின்கீழ் அரசியலமைப்பு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களை நியமித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் பெயரை அங்கீகரிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை மறுக்கின்றவிடத்து, சனாதிபதி புதிய பெயர் நியமனமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அத்தகைய பெயர் நியமனத்துக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு பதினான்கு நாட்காலப்பகுதியினுள் அவசியமான நியமனங்களைச் செய்வதற்கு சனாதிபதி தவறுகின்ற பட்சத்தில், அரசியலமைப்புப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

உறுப்பினர் ஒருவராக நியமிக்கப் படுவதற்கான தகைமையீனம்

**6.** ஆளொருவர் -

(அ) பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக, மாகாண சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்படின் அல்லது நியமிக்கப்படின்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இராதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(இ) ஆணைக்குழுவினால் அல்லது அதன் சார்பாக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றின்கீழ் உரித்துடைமை அல்லது நன்மையொன்றை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருப்பின் அல்லது துய்த்திருப்பின்;

(ஈ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக பணிகளை நடைமுறைப்படுத்துவதை பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருப்பின்;

(உ) செல்லுபடியான காரணமொன்றின்றி ஆணைக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருப்பின்;

(ஊ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் பயனுடையதாகவுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்ற ஆளொருவராக கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் அல்லது வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(எ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டு, பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்ற அல்லது வங்கி முறிந்த ஆளொருவராகவிருப்பின்; அல்லது

(ஏ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலத்துக்கு தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அல்லது அதற்கான கட்டளையொன்றைப் பெற்றிருப்பின்,

அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிவிலகுகை, பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிக்காலம்

**7.** *(1)* ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் சனாதிபதிக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை எத்தேதியன்று சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய ஆள்-

(அ) மூன்று மாதங்கள் எனும் காலப்பகுதியொன்றுக்கு மேற்பட்டதாக நீடித்துள்ள உடல் அல்லது உளத் தகுதியீனம் காரணமாக அத்தகைய பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ளார்;

(ஆ) ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்குத் தவறியுள்ளார்; அல்லது

(இ) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தகைமையற்றவராகவுள்ளார்,

என இயைபான உறுப்பினரின் கேட்பொன்றை அடுத்துப் பின்னர் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால் அவரது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கேட்பு, அத்தகைய கேட்பு தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(4) அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதன்மேல், சனாதிபதி, ஆணைக்குழுவின் அத்தகைய உறுப்பினரை எழுத்தில் அகற்றுதல் வேண்டுமென்பதுடன் அகற்றுகைக் கடிதத்தில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்-

(அ) அகற்றுகை எத்தேதியன்று பயனுறுதல் வேண்டுமோ அத்தேதி; அது, அகற்றுகைக் கடிதம் எத்தேதியன்று பெறப்படுகின்றதோ அத்தேதிக்கு முன்னரான ஒரு தேதியாக இருத்தல் ஆகாது; அத்துடன்

(ஆ) அகற்றுக்கைக்கான காரணங்கள்.

(5) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கேட்பு தொடங்குவதற்கு முன்னர் அல்லது கேட்பின் போது சனாதிபதியினால் பதவியிலிருந்து இடைநிறுத்தப்படலாம்.

(6) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் பதவிக்காலம் நியமனத்தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாகவிருத்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் இறப்பின் மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது வேறு காரணத்துக்காகப் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, சனாதிபதி 5 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரின் இடத்தில் வேறொரு தகவுடைய ஆளை நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அத்தகைய ஆள் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் எந்த உறுப்பினரின் பதவிக்காலம் பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலமாகவல்லாமல் முடிவுறு வதற்குள்ளதோ அந்த உறுப்பினரொருவர், தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக ஒன்றுக்கு மேற்படாத மேலதிக பதவிக்காலத்துக்கு மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தின் தீர்மானமொன்றினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஊதியம் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் தவிசாளர்

**8.** (1) சனாதிபதி, (இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவின் தவிசாளராகவிருப்ப தற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களினுள் இருந்து ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், சனாதிபதிக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப் பட்ட கடிதத்தின் மூலம் தவிசாளரின் பதவியிலிருந்து விலகலா மென்பதுடன் அப்பதவிவிலகுகை, எத்தேதியன்று சனாதிபதியி னால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) தவிசாளர் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழு வின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதற்கு தகைமையற்றவராக விருப்பின் தவிசாளராக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) தவிசாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகவிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், தவிசாளர் பதவியை வறிதாக்கியதன்மீது தவிசாளராக மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் ஆகாது.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, தவிசாளர், தவிசாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், சுகவீனம் அல்லது வேறு ஏதேனும் காரணமாக அவரது பதவியில் இல்லாத போது தவிசாளரின் பணிகளை நிறைவேற்றுவதற்கு உறுப்பின ரொருவரை பிரதித் தவிசாளராகவிருப்பதற்கு எழுத்தில் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்டங்கள்

**9.** (1) தவிசாளர், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும். ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் எழுத்திலான அறிவித்தல் மூலம் ஆணைக்குழுவின் கூட்டமொன்றை கூட்டுமாறு தவிசாளரைக் கோரலாம் என்பதுடன் தவிசாளர் நல்ல காரணத்துக்காகவல்லாது அவ்வாறு செய்வதற்கு மறுத்தலு மாகாது.

*(2) ஆணைக்குழுவானது, தவிசாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் கருமத்தை உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் உடன்படிக்கையுடன் அவசரமானது என முடிபு செய்யலாம்.*

*(3) தவிசாளர், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காதபோது பிரதித் தவிசாளர் அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குதலும் வேண்டும்.*

*(4) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும். தவிசாளர் சமுகமளிக்காதபோது, கூட்டநடப்பெண் பிரதித் தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.*

*(5) ஆணைக்குழுவின் முடிபுக்காகவுள்ள எல்லாக் கருமங்களும் அம்முடிபு எந்தக்கூட்டத்தில் எடுக்கப்படுகின்றதோ அந்தக் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் முடிபு செய்யப்படுதல் வேண்டும். ஏதேனும் கருமத்தின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் அவ்வாறு ஆதரவளிக்கப்பட்ட முடிபு அக்கருமத்தின் மீது ஆணைக்குழுவின் முடிபாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*(6) காரணங்களினால் ஆதாரப்படுத்தப்பட்ட ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளும் எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் இலச்சினை 10 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்திக்கிணங்க அவற்றில் பொறிக்கப்படுதலும் வேண்டும்.*

*(7) ஆணைக்குழுவினால் முடிபுசெய்யப்படவேண்டிய ஏதேனும் கருமத்தின் மீது வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(9) ஆணைக்குழுவின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் நிலவுவதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு நிலவுவதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

ஆணைக் குழுவின் இலச்சினை

**10.** ஆணைக்குழுவின் இலச்சினை -

(அ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்;

(ஆ) ஆணைக்குழு காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆணைக்குழுவின் வலுவளிப்புடனும் ஆணைக்குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமளித்திருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

## பாகம் II

### ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும்

ஆணைக் குழுவின் தத்துவங்களும் பணிகளும்

**11.** ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஏதேனும் தடைசெய்யப்பட்ட கூற்றினால் பங்கமான முறையில் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கு அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றுக்கு பதிலிறுப்பதற்கான வாய்ப் பொன்றை வழங்குமாறு அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை வெளியிட்டுள்ள அல்லது அறிவித்துள்ள அல்லது அறிவிப்பதற்கு அவர்களின் சேவை பயன்படுத்தப்பட் டுள்ள ஆட்களை, இணையச்சேவை வழங்குநர்களை அல்லது இணைய இடையீட்டாளர்களைத் தேவைப்படுத்தி அவர்களுக்கு பணிப்புரைகளை வழங்குதல்;

(ஆ) தடை செய்யப்பட்ட கூற்றுக்களை அறிவிக்கின்ற ஆட்களுக்கு அத்தகைய கூற்றுக்கள் அறிவிக்கப்படு வதனை நிறுத்துமாறு அறிவித்தல்களை வழங்குதல்;

(இ) தடை செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொண்டுள்ள நிகழ்நிலை அமைவிடமொன்றுக்கான அணுக்கத்தை இயலாமலாக்குவதற்கு அல்லது அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்திலிருந்து அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை அகற்றுவதற்கு எவரேனும் இணையச்சேவை வழங்குநர்களுக்கு அல்லது இணைய இடையீட்டாளருக்கு அறிவித்தல்களை வழங்குதல்;

(ஈ) நீதிமன்றத்தை அவமதிப்பதாகவிருக்கக்கூடிய அல்லது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கச்சார்பின்மையின் பேணுகைக்குப் பங்கமாகவுள்ள எவையேனும் தொடர் பாடல்களை அதன் கவனத்துக்காக அரசியலமைப்பின் உறுப்புரை 105 இன் (3) ஆம் பந்தியில் அல்லது வேறு ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தோதான நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் அத்தகைய நீதிமன்றத் துக்கு அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்கு தல்;

(உ) தடைசெய்யப்பட்ட கூற்றுக்களை அகற்றுவதற்கு இணையச் சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர் களுக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ஊ) ஏதேனும் கூற்றின் பொய்யானதன்மை பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கான தகவல்கள் அடங்கிய நிகழ்நிலைப் பக்கமொன்றைப் பேணுதல்;

(எ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி வெளிப் படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடங்களைக் குறித் துரைத்தல் மற்றும் அத்தகைய நிகழ்நிலை அமை விடத்தினுடாக பரப்பப்பட்ட தகவல்களுக்கான அணுக் கத்தை இயலாமலாக்குவதற்கு விதப்புரைகளைச் செய் தல்;

(ஏ) ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய புலனாய்வுகளை நிறைவேற்றுதல் ;

(ஐ) இலங்கையில் உள்ள இறுதிப் பயனர்களுக்கு இணைய அடிப்படையிலான தொடர்பாடற் சேவைகளை வழங்கு கின்ற இணையச்சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கு விதிகள் என்ற வகையாக செயல் முறைக் கோவைகளை வழங்குதல்;

(ஒ) இலங்கையில் இறுதிப் பயனர்களுக்கு சமூக ஊடகத் தளங் களை வழங்கும் இணையத் தளங்களை இச்சட்டத் தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய முறையில் பதிவு செய்தல்;

(ஓ) ஆணைக்குழு அதன் தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் பாதிக்கக்கூடிய அல்லது பாதிக்கப்

படக்கூடிய சாத்தியமுள்ள எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் அது தோதானதெனக் கருதுகின்ற அளவுக்கு கலந்தாலோசித்தல்;

(ஔ) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் இலங்கையில் நிகழ்நிலைக் காப்பு சம்பந்தமான எல்லாக் கருமங்களும் பற்றி ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்றவாறு அரசாங்கத்துக்கு மதியுரையளித்தல்;

(க) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல் அத்துடன் அதனை விற்பனை செய்தல், குத்தகைக்கு கொடுத்தல், ஈடுவைத்தல், பரிமாறுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ங) அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகைக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்தல்;

(ச) ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் புலனாய்வை நடாத்துவதில் பொலிசின் உதவியைப் பெறுதல்;

(ஞ) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி உறுப்பினர்களை நியமித்தல், தொழிலுக்கமர்த்தல் மற்றும் அவர்களை நீக்குதல் அத்துடன் அத்தகைய பணியாட்டொகுதியினர் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்; அத்துடன்

(ட) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல் புரிதல் மற்றும் நிறைவேற்றுதலுக்கு இடைநேர்விளைவான அல்லது அவற்றின் மீது விளைவாந்தன்மையினவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

பாகம் III

### பொய்யான கூற்றுக்களின் நிகழ்நிலைத் தொடர்பாடலை தடைசெய்தல்

*இலங்கையில் பொய்யான கூற்றுக்களின் தொடர்பாடலை தடைசெய்தல்*

**12.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, பொய்யான கூற்றொன்றை அறிவிப்பதன் மூலம் தேசிய பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் அல்லது பொது ஒழுங்குக்கு அச்சுறுத்தலாக அமைகின்ற அல்லது மக்களின் வெவ்வேறு வகுப்பினரிடையே வெறுப்பு மற்றும் பகை உணர்வுகளை முன்னெடுத்துச் செல்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*நீதிமன்ற அவமதிப்பாக அமைகின்ற பொய்யான வற்றின் அறிவிப்பு*

**13.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, அரசியலமைப்பின் 105 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியின் அல்லது வேறு ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி, நீதிமன்ற அவமதிப்புத் தவறொன்றை தண்டிப்பதற்கான விசேட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற ஏதேனும் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில், நீதிமன்ற அவமதிப்பாக அமைகின்ற நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக பொய்யான கூற்றொன்றை அறிவிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அவ்வுறுப்புரையின் மற்றும் இயைபான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளுக்கு தண்டனைத் தீர்ப்பளிப்பதில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

*கலகம் விளைவிப்பதற்கு பொய்யான கூற்று மூலம் தேவையின்றி ஆத்திரமூட்டல்*

**14.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, ஏதேனும் ஆத்திரமூட்டல் அல்லது தூண்டுதல் கலகத் தவறைப் புரியச் செய்யும் என உட்கருதி அல்லது அது அவ்வாறு செய்யக்கூடும் என அறிந்து கொண்டு நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக பொய்யான கூற்றொன்றை அறிவிப்பதன் மூலம் எவரேனும் ஆளை தீய எண்ணத்துடன் அல்லது தேவையின்றி ஆத்திரமூட்டுகின்ற அல்லது எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற எவரேனும் ஆள்–

(அ) அத்தகைய ஆத்திரமூட்டலின் விளைவாக அக்கலகத் தவறு புரியப்படின், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அக்கலகத் தவறு புரியப்படாவிடின், மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பொய்யான கூற்றொன்றின் மூலம் மதக் கூட்டம் ஒன்றைக் குழப்புதல்

**15.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, பொய்யான கூற்றொன்றை அறிவிப்பதன் மூலம் மத வழிபாட்டினை அல்லது மதச் சடங்குகளைப் புரிவதில் சட்டப்படி ஈடுபட்டுள்ள ஏதேனும் கூட்டத்துக்கு தன்னிச்சையாக குழப்பம் விளைவிக்கின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்;

மத உணர்வுகளை நிந்திப்பதற்கு பொய்யான கூற்றுக்கள் பற்றிய திட்டமானதும் வன்மமானதுமான தொடர்பாடல்

**16.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக ஏதேனும் ஆட்கள் வகுப்பினரின் மத உணர்வுகளை நிந்திக்க வேண்டும் என்ற திட்டமானதும் வன்மமானதுமான உளக்கருத்துடன் ஒன்றில் பேசப்படும் அல்லது எழுதப்படும் சொற்கள்மூலம் அல்லது கட்புலக் காட்சிகள்மூலம் பொய்யான கூற்றொன்றை அறிவிப்பதன் மூலம் அவ்வகுப்பினரின் மதத்தை அல்லது மத நம்பிக்கைகளை நிந்தை

செய்கின்ற அல்லது நிந்தை செய்ய எத்தனிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மீது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்;

நிகழ்நிலை ரீதியில் ஏமாற்றுதல்

**17.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, நிகழ்நிலைக் கணக்கொன்று என்ற வகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக பொய்யான கூற்றொன்றை அறிவிப்பதன் மூலம் எவரேனும் ஆளை வஞ்சிக்கின்ற –

(அ) அவ்வாறு வஞ்சிக்கப்பட்ட ஆளை, ஏதேனும் ஆதனத்தை ஆளெவருக்கேனும் ஒப்படைக்குமாறு அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் ஆதனத்தை வைத்திருத்தற்குச் சம்மதிக்குமாறு, மோசடியாக அல்லது நேர்மையீனமாகத் தூண்டுகின்ற; அல்லது

(ஆ) அவ்வாள் அவ்விதம் வஞ்சிக்கப்பட்டிராவிடின் அவர் செய்திருக்கமாட்டாததும் அல்லது தவிர்த்திருக்கமாட்டாத தும் அவ்வாளுக்கு உடம்பில், மனதில், கீர்த்தியில் அல்லது ஆதனத்தில் தீங்கை அல்லது அரசாங்கத்திற்குச் சேதத்தை அல்லது இழப்பை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கக்கூடிய ஒரு செயலாக அல்லது தவிர்வாக உள்ளதுமான எதனையும் செய்யுமாறு அல்லது தவிர்க்குமாறு அவ்விதம் வஞ்சிக்கப்பட்ட ஆளை உளக்கருத்துடன் தூண்டுகின்ற,

எவரேனும் ஆள் "நிகழ்நிலைரீதியில் ஏமாற்றுதல்" என்ற தவறைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடியவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஏழு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

நிகழ்நிலை ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல்

**18.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, நிகழ்நிலைக் கணக்கொன்று என்ற வழிவகையாக–

(அ) வேறு ஆளொருவர் எனப் பாசாங்கு செய்வதன்மூலம்;

(ஆ) அறிந்து கொண்டு ஓராளுக்காக வேறொருவரை பதிலீடு செய்வதன்மூலம்; அல்லது

(இ) எவரேனுமாள் அல்லது வேறேவரேனும் ஆள் உண்மையாக அவ்வாள் அல்லது அவ்வேறு ஆள் தவிர்ந்த ஆளொருவர் என பிரதிநிதித்துவம் செய்வதன் மூலம்,

ஏமாற்றுகின்ற அத்தகைய ஆள் “நிகழ்நிலை ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல்” என்னும் தவறைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது மூன்றாண்டுகளுக்கு நீடிக்கக் கூடியதான காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

படைக் கலகத்தை அல்லது அரசுக்கெதிரான தவறொன்றை ஏற்படுத்தும் உளக்கருத்துடன் பொய்யான அறிக்கையைப் பரப்புதல் முதலியன

**19.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி இலங்கையின் கடற்படை, தரைப்படை அல்லது வான்படையிலுள்ள எவரேனும் அலுவலர், மாலுமி, தரைப்படை வீரர் அல்லது வான்படை வீரரைக் கலகம் விளைவிக்கச் செய்யும் உளக்கருத்துடன் அல்லது பொதுமக்களுக்கு பயத்தை அல்லது அச்சத்தை ஏற்படுத்தி அரசுக்கெதிராக அல்லது பொதுமக்களின் அமைதிக்கெதிராக தவறொன்றைப் புரிவதற்கு வேறு எவரேனும் ஆளைத் தூண்டும் உளக்கருத்துடன் ஏதேனும் பொய்யான கூற்றை அறிவிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஏழாண்டுகளை

விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஏழு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

தொல்லை முதலியனவற்றை ஏற்படுத்துவதற்கு கூற்றுக்களை அறிவித்தல்

**20.** (1) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி (இப்பிரிவில் "இலக்காகவுள்ள ஆள்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) இன்னொரு ஆளுக்கு தொல்லையை விளைவிக்கும் உளக்கருத்துடன் இலக்காகவுள்ள ஆளின் அல்லது இலக்காகவுள்ள ஆளின் தொடர்புபட்ட ஆளொருவரின் ஏதேனும் "அந்தரங்கத் தகவலை" வெளிவிடுவதன்மூலம் கூற்றொன்றை வேண்டுமென்று அளிக்கின்ற அல்லது அறிவிக்கின்றவரும் அதன் விளைவாக இலக்காகவுள்ள ஆளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு தொல்லையை ஏற்படுத்துகின்றவருமான எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மீது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்று ஏற்படும் பட்சத்தில், அத்தகைய மறியற்றண்டனைக் காலம் அல்லது குற்றப்பணம் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக-

(அ) "அந்தரங்கத் தகவல்" என்பது, எவரேனும் ஆள் அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடிய ஏதேனும் படம், கட்புல அல்லது செவிப்புல விபரங்கள் உட்பட தனிப்பட்ட தகவல் எனப்பொருள்படும், ஆனால் வேறு ஏதேனும் தவறைப் புரிவதற்குச் சான்றாகவிருக்கக்கூடிய ஏதேனும் தகவலை உள்ளடக்காது; அத்துடன்

(ஆ) "தொல்லை" என்பது ஆளொருவரை அச்சுறுத்தும் அதிர்ச்சியூட்டும் அல்லது துன்பமிழைக்கும் அல்லது ஆளொருவரின் கௌரவத்தை மீறுகின்ற அல்லது

பயமுறுத்தும், மதிப்புக்குறைக்கும், பகையுடைய, அவமானப்படுத்தும் அல்லது தீங்குவிளைவிக்கின்ற சூழல் ஒன்றை உருவாக்கும் பயன்கொண்டுள்ள அல்லது அத்தகைய எல்லாப் பயன்களையும் கொண்டுள்ள ஒரு செயல் அல்லது நடத்தை எனப் பொருள்படும்.

எடுத்துக்காட்டுகள்–

(அ) ர மற்றும் ல முடிவடைந்துள்ள உறவு முறையொன்றில் முன்னாளில் இருந்துள்ளனர். அடையாளம் காணுவதற்கு வசதியளிப்பதன் மூலம் அல்லது ஏனையோரை ல உடன் தொடர்புகொள்வதற்கு இயலச் செய்வதன் மூலம் ல இற்கு தொல்லை ஏற்படுத்துவதற்கு உட்கருதி ல இன் புகைப்படங்கள் மற்றும் தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கம் உட்பட சமூக ஊடக தளமொன்றில் பதிவொன்றை எழுதுகின்றார். ல அப் பதிவுகளைப் பார்க்கவில்லை, ஆனால் ல என்பவரை உடலுறவுக்காக உத்தேசித்து (பதிவுகளை வாசித்த) அறிமுகமற்றவர் களிடமிருந்து தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்திச் சேவைகளின் மூலம் குறுஞ்செய்திகளை அவர் பெறுவதுடன் அவற்றினால் தொல்லைக் குள்ளாக்கப்படுகின்றார். அத்தகைய பதிவு தொடர்பில் இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு ர என்பவர் குற்றவாளியாதல் வேண்டும்.

(ஆ) ர மற்றும் ல முடிவடைந்துள்ள உறவுமுறையொன்றில் முன்னாளில் இருந்துள்ளனர். ல என்பவர் அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்க முடியுமான ர என்பவரின் உடைமையில் உள்ள ல என்பவரின் புகைப்படமொன்றை ர என்பவர் பதிவிடுகின்றார். அத்தகைய பதிவு தொடர்பில் இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு ர என்பவர் குற்றவாளியாதல் வேண்டும்.

*சிறுவர் துர்ப்பிரயோகம் முதலியன*

**21.** (1) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, நிகழ்நிலைக் கணக்கொன்று என்ற வகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக தண்டனைச் சட்டக்கோவை யின் 286அ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ, அல்லது 365ஆ ஆகிய பிரிவுகளின் கருத்தினுள் தவறொன்றாக அமைகின்ற சிறுவர் ஒருவர் மீதான செயலொன்றைப் புரிகின்ற அல்லது அதற்கு உதவுகின்ற மற்றும் உடந்தையளிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய ஒவ்வொரு தவறுக்குமான தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், சிறுவர் ஒருவர் தொடர்பில் தண்டனைச் சட்டக்கோவையின் 363 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு உதவுதல் மற்றும் உடந்தையாகவிருத்தல் எனும் விடயத்தில், தண்டனைச் சட்டக்கோவையின் 364 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ஒரு "பெண்" என்பதற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இப்பிரிவின் நோக்கத்துக்காக "சிறுவர்" ஒருவருக்கான குறிப் பீடொன்றாக வாசிக்கப்படுதலும் பொருளமைத்துக் கொள்ளப் படுதலும் வேண்டும்.

(2) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியே யாயினுஞ்சரி, நிகழ்நிலக் கணக்கொன்று என்ற வகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக சிறுவர் ஒருவர் தொடர்பாக நிந்தனைக்குட்படுத்துகின்ற அல்லது ஆபாசத்தன்மையினவான ஏதேனும் புகைப்படத்தை, கேட்பொலியை அல்லது காணொளியை வெளியிடுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாயததும் இருபது ஆண்டுகளுக்கு மேற் படாததுமானவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு மேலதிகமாக, எந்தச் சிறுவர் அல்லது சிறுவர்கள் குழு தொடர்பில் அத்தகைய தவறு புரியப் பட்டதோ அந்தச் சிறுவருக்கு அல்லது சிறுவர்கள் குழுவுக்கு நீதி மன்றத்தினால் கட்டளையிடப்பட்டவாறான அத்தகைய நட்டஈட்டைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

தவறொன்றைப் புரிவதற்கு தன்னியக்கச் செய்நிரல்களை ஆக்குதல் அல்லது மாற்றுதல்

**22.** இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற கூற்றொன்றை தன்னியக்கச் செய்நிரலொன்று என்ற வழிவகையாக அறிவிக்கும் அல்லது வேறு எவரேனும் ஆள் அறிவிப்பதனை இயலச் செய்யும் உளக்கருத்துடன் தன்னியக்கச் செய்நிரலொன்றை ஆக்குகின்ற அல்லது மாற்றுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IV

## இலங்கையில் தடைசெய்யப்பட்ட கூற்றுக்களின் நிகழ்நிலைத் தொடர்பாடலுக்கு எதிரான வழிமுறைகள்

தடை செய்யப்பட்ட கூற்றுக்களின் தொடர்பாடல் பற்றி ஆணைக் குழுவுக்கு தகவல் வழங்குதல்

**23.** (1) இலங்கையில் உள்ள (இச்சட்டத்தில் "இறுதிப் பயனர்கள்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) இணைய அடிப்படையிலான தொடர்பாடல் சேவைகளைப் பயன்படுத்துபவர்களினால், வேறு எவரேனும் ஆளினால் பார்க்கப்படுகின்ற, கேட்கப்படுகின்ற அல்லது வேறு வகையாக உய்த்தறியப்படுகின்ற தடைசெய்யப்பட்ட கூற்றொன்றின் தொடர்பாடலினால் இன்னலுற்ற ஆளொருவர், ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வடிவத்தில் அத்தகைய தொடர்பாடல் தொடர்பான தகவலை வழங்கி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக தடைசெய்யப்பட்ட கூற்றொன்றின் தொடர்பாடல் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு காலத்துக்குக்காலம் ஆணைக்குழு அவசியமென கருதக்கூடியவாறு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினுள் இருந்து அத்தகைய எண்ணிக்கையினவான தகவல் அலுவலர்களை ஆணைக்குழு பெயர்குறித்தல் வேண்டும்.

(3) (அ) ஒவ்வொரு முறைப்பாடும், கிடைக்கக் கூடியதாக விடத்து, (இதனகத்துப்பின்னர் ''சீவஇ'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சீர்மை வள இடப்படுத்தி அல்லது எந்த அமைவிடத்திலிருந்து அல்லது இலக்கத்திலிருந்து தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டதோ அல்லது வெளியிடப்பட்டதோ அந்த அமைவிடம் அல்லது இலக்கத்தின் அடையாளம் காணும் சிறப்புக்கூறுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள் உட்பட தடைசெய்யப்பட்ட கூற்றைச் செய்வதற்கு அல்லது அறிவிப்பதற்கு பொறுப்பாகவுள்ள ஆள் அல்லது ஆட்கள் பற்றி கிடைக்கக் கூடியதாகவுள்ள எல்லா விபரங்களையும் எடுத்துரைத்தல் வேண்டும்.

(ஆ) தடைசெய்யப்பட்ட கூற்றைச் செய்யும் அல்லது அறிவிக்கும் ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் எவரேனும் இணையச்சேவை வழங்குநருக்கும் அல்லது இணைய இடையீட்டாளருக்கும் முறைப்பாட்டின் பிரதியொன்றை சேர்ப்பிப்பதற்கு சாத்தியமாக வுள்ளவிடத்து, முறைப்பாட்டாளர் அவ்வாறு செய்தல் வேண்டும்.

(இ) மேற்சொல்லப்பட்டவாறு அத்தகைய அறிவித்தலை வழங்குவதற்கு அவசியமான தகவல்கள் கிடைக்கக் கூடியதாகவில்லாத பட்சத்தில், முறைப்பாட்டாளர் அத்தகைய தகவல் இல்லாமையை முறைப்பாட்டில் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) அத்தகைய தகவல் பற்றிய இலத்திரனியல் வடிவத்திலான ஒரு பற்றுச்சீட்டு உட்பட பற்றுச்சீட்டு பற்றிய எழுத்திலான ஒப்புக் கொள்ளுகையொன்று ஆணைக்குழு சார்பாக தகவல் அலுவலரினால் உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும்.

(5) தடைசெய்யப்பட்ட கூற்றொன்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கான போதிய விடயங்கள் உள்ளன என ஆணைக்குழு அபிப்பிராயப்படுகின்றவிடத்து, ஆணைக்குழு ஆணைக்குழுவின் அலுவலர்களினூடாக புலனாய்வுகளை நிறைவேற்றுதல் வேண்டும். அத்தகைய புலனாய்வுகளின் போது, அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவித்ததாக சார்த்துப்பட்ட ஆளுக்கு கேட்கப்படுவதற்கான வாய்பொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(6) (அ) தடைசெய்யப்பட்ட கூற்றொன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என போதிய விடயங்கள் உள்ளன என ஆணைக்குழு திருப்திப்படின், அது விடயத்தின் பாரதூரமான தன்மையையும் அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றினால் விளைவிக்கப்பட்ட சேதத்துக்கான அல்லது தீங்கிற்கான சாத்தியக் கூறையும் கவனத்துட் கொண்டு அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று புழக்கத்தில் விடப்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுக்குமாறு அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவித்த ஆளுக்கு அறிவித்தல் வழங்கலாம்.

(ஆ) எந்த ஆளுக்கு (அ) என்னும் பந்தியின் கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆளொருவர் உடனடியாக ஆனால், அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்டதிலிருந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கும் பிந்தாமல் அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(இ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், அது நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவித்த ஆளின் கடைசியாக

அறியப்படும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப் படுகின்றவிடத்து அல்லது அத்தகைய ஆளுக்கு இலத்திரனியல் வழிவகைகள் மூலம் சேர்ப்பிக்கப் படுகின்றவிடத்து அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்து ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட அத்தகைய வேறு தோதான முறைமூலம் சேர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல், அத்தகைய அறிவித்தல் அத்தகைய ஆளின் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சமூக ஊடக கணக்குக்கு அல்லது எந்த இணையச் சேவை வழங்கு நர் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின் மீது அத்தகைய தடை செய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணையச் சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டா ளருக்கு அனுப்பப்படுகின்றவிடத்து, இலத்திரனியல் வழிவகைகள் மூலம் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(7) எவரேனும் ஆள் (6) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டதிலிருந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களினுள் அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற விடத்து, ஆணைக்குழு அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதிக்காக விடயத்துக்கேற்ப, எந்த இணையச்சேவை வழங்குநரின் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின் மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணைச்சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளருக்கு–

(அ) அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றுக்கு இலங்கையில் உள்ள இறுதிப் பயனர்களினாலான அணுக்கத்தை இயலா மலாக்கும்படி; அல்லது

(ஆ) அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்துலிருந்து அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை அகற்றும்படி,

அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(8) எந்த இணையச் சேவை வழங்குநருக்கு அல்லது இணைய இடையீட்டாளருக்கு (7) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த இணையச் சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளர், அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட திலிருந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களினுள் அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(9) (அ) ஆளொருவர் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க செயலாற்றுவதற்கு தவறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) இணையச்சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளர் ஒருவர் (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கு இணங்க செயலாற்றுவதற்குத் தவறுகின்ற விடத்து,

ஆணைக்குழு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆளை அல்லது இணையச் சேவை வழங்குநரை அல்லது இணைய இடையீட்டாளரை அத்தகைய ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறு பணிக்கும் கட்டளையொன்றைப் பெறுவதற்கு மனு மற்றும் சத்தியக்கடதாசி என்றவகையாக நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய விண்ணப்பம் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*தடைசெய்யப்பட்ட கூற்றுக்கள் புழக்கத்தில் விடப்படுவதனைத் தடுப்பதற்கான நீதிமன்ற கட்டளை யொன்றுக்காக விண்ணப்பித்தல்*

**24.** (1) ஏதேனும் தடைசெய்யப்பட்ட கூற்றின் தொடர்பாடல் மூலம் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய தகவல் புழக்கத்தில் விடப்படுவதனைத் தடுப்பதற்கான கட்டளையொன்றைப் பெறுவ தற்கு மனு மற்றும் சத்தியக்கடதாசி என்ற வகையாக நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) நீதிவான், அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட் கொண்டதன் மேல், அத்தகைய ஆளுக்கு அல்லது எந்த இணையச் சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை

அமைவிடத்தின் மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணையச்சேவை வழங்குநர் அல்லது இணைய இடையீட்டாளருக்கு நிபந்தனையுடனான கட்டளை யொன்றை வழங்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மற்றவற்றுக் கிடையில் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கலாம்–

(அ) உடனடியாக தடைசெய்யப்பட்ட கூற்றின் தொடர்பாடலை நிறுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஆளின் பெயர்; அத்துடன்

(ஆ) நீதிவான் தகுதியானதெனக் கருதுகின்றவாறான வேறு ஏதேனும் கட்டளை.

(4) (அ) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அது நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆளின் கடைசியாக அறியப்படும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்படுகின்றவிடத்து அல்லது அத்தகைய ஆளுக்கு இலத்திர னியல் வழிவகைகள் மூலம் அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்து நீதிவானினால் கட்டளையிடப்பட்டவாறான அத்தகைய வேறு தோதான முறை மூலம் சேர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ)இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அத்தகைய கட்டளை அத்தகைய ஆளின் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சமூக ஊடகக் கணக்குக்கு அல்லது எந்த இணைய அணுக்கச் சேவை வழங்குநரின் அல்லது இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின் மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணையச் சேவை வழங்குநருக்கு அல்லது இணைய இடையீட்டாளருக்கு அனுப்பப்படுகின்றவிடத்து, இலத்திரனியல் வழிவகைகள் மூலம் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கெதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த ஆள் ஒன்றில் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அல்லது அக்கட்டளையானது ஏன் முற்றானதாக்கப் படுதலாகாது எனக் காரணம் காட்டுவதற்கு (6) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நீதிவான் முன்னர் தோன்றுதல் வேண் டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கெதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த ஆள், காரணம் காட்டுவதற்கு உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய கட்டளையை ஆக்கியதிலிருந்து இரண்டு கிழமைகள் எனும் காலப்பகுதியொன்றினுள் அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் அத்தகைய ஆள் தோன்றுதல் வேண்டுமென்பதுடன் கட்டளை புறத்தொதுக்கப் படுவதற்கு அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான முறையில் திரிபுபடுத்துவதற்கு பிரேரித்தலும் வேண்டும்.

(7) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கெதிராக கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த ஆள், அக்கட்டளை யுடன் இணங்கியொழுகாவிடின் அல்லது (6) ஆம் உட்பிரிவினகீழ் நீதிவான் முன்னர் தோன்றாவிடின் அத்தகைய ஆள் (9) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன் அக்கட்டளையானது முற்றானதாக்கப்படு தலும் வேண்டும்.

(8) (அ) அத்தகைய ஆள் மனு மற்றும் சத்தியக்கடதாசி என்றவகையாக காரணம் காட்டுவதற்கு (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நீதிவான் முன்னர் தோன்றுகின்றவிடத்து, நீதிவான் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்; அவ்விசாரணை, விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

(ஆ) நீதிவான், (2) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கெதிராக நிபந்தனையுடனான கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த ஆளினால் கூறப்பட்ட நிகழ்வுகளை கருத்திற்கொண்டு, இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை நியாயமானதாகவும் முறையானதாகவும்

இல்லையென அவர் திருப்திப்படின், ஒன்றில் கட்டளை புறத்தொதுக்கப்படுவதற்கு அல்லது திரிபுபடுத்தப்படுவதற்கு பிரேரிக்கலாம் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தோதான கட்டளையொன்றையும் ஆக்கலாம்.

(இ) நீதிவான் அவ்வாறு திருப்திப்படாவிடின், (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) இரண்டாம் உட்பிரிவின்கீழான கட்டளை (ஆ) என்னும் பந்தியின்கீழ் திரிபுபடுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கெதிராக ஏதேனும் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த ஆள், நீதிவானினால் கட்டளையிடப் படும் காலப்பகுதியினுள்ளும் முறையிலும் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் தவ றொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் நீதிவான் -

(அ) இலங்கையில் தடைசெய்யப்பட்ட கூற்றின் அத்தகைய தொடர்பாடல் அடங்கிய நிகழ்நிலை அமைவிடத்துக்கு இலங்கையில் உள்ள இறுதிப்பயனர்களினாலான அணுக்கத்தை இயலாமலாக்குவதற்கான; அல்லது

(ஆ) அத்தகைய தொடர்பாடல் அடங்கிய நிகழ்நிலை அமைவிடத்திலிருந்து இலங்கையில் தடைசெய்யப்பட்ட கூற்றின் இயைபான தொடர்பாடலை அகற்றுவதற்கான,

நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு கட்டளையிட லாம்.

**25.** (1) எவரேனும் ஆள் தடைசெய்யப்பட்ட கூற்றொன்றின் தொடர்பாடலினால் இன்னலுறுகின்றவிடத்தும் 23 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் முறைப்பாட்டின் பிரதியொன்றைச் சேர்ப்பிப்பதற்கு அவசியமான தகவல் கிடைக்கக்கூடியதாக வில்லாதவிடத்தும், அத்தகைய ஆள் 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாட்டில் அத்தகைய தகவல் இல்லாமையை குறித்துரைத்தல் வேண்டும்.

ஆளடையாளத் தகவலை வெளிவிடுதல்

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட முறைப்பாடொன்றை ஆணைக்குழு பெறுகின்ற பட்சத்தில், தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவித்த ஆளின் ஆளடையாளம் தொடர்பான தகவலை வெளிவிடுமாறு எந்த இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின்மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டதோ அந்த இணைய இடையீட்டாளரைப் பணிக்கும் நிபந்தனையுடனான கட்டளையொன்றை நாடி மனு மற்றும் சத்தியக்கடுதாசி என்ற வகையாக நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) நீதிவான் -

(அ) கூற்றானது ஒரு தடைசெய்யப்பட்ட கூற்று என;

(ஆ) கட்டளையானது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவித்த ஆளை அடையாளம் காணும் தனி நோக்கத்துக்காக நாடப்படுகின்றது என; அத்துடன்

(இ) தகவலை வெளிவிடுவதற்கான மனுதாரரின் உரிமை ஆளடையாளம் காணப்படுவதற்கு நாடப்பட்ட ஆளின் ஏதேனும் எதிரீட்டு உரிமை அல்லது அக்கறையினால் மேலோங்கப்படுகிறதா என்பதைக் கவனத்துட் கொண்டு நீதிமன்றத்தின்முன்னர் உள்ள கருமத்தின்

எல்லாச் சூழ்நிலைகளிலும் கட்டளையானது விகிதா சாரப்படியானதும் அவசியமானதுமான ஒரு பதிலி றுப்பாகவுள்ளது என,

திருப்திப்படுவதன்மேல், ஆணைக்குழுவினால் நாடப்பட்ட கட்டளையை வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மற்றவற்றிற் கிடையில் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) நாடப்பட்ட தகவலை வெளிவிடுவதற்கு தேவைப்படுத் தப்படுகின்ற இணைய இடையீட்டாளரின் பெயர்; அத்துடன்

(ஆ) நீதிவான் தகுதியானதெனக் கருதுகின்றவாறான வேறு ஏதேனும் கட்டளை.

(5) (அ) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அது நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, இணைய இடையீட்டாளரின் கடைசியாக அறியப்படும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்றவிடத்து அல்லது அத்தகைய இணைய இடையீட்டாளருக்கு இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்து நீதிவானினால் கட்டளை யிடப்பட்ட அத்தகைய வேறு தோதான முறை மூலம் சேர்ப்பிக்கப் படுகின்றவிடத்து, சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அத்தகைய கட்டளை எந்த இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின் மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த இணைய இடையீட்டாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சமூக ஊடக கணக்குக்கு அனுப்பப்படுகின்றவிடத்து இலத்திரனியல் வழிவகைகள் மூலம் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) மூன்றாம் உட்பிரிவின் கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் ஒன்றில் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அல்லது அக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படுதல் ஆகாது எனக் காரணம் காட்டுவதற்கு (7) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நீதிவான் முன்னர் தோன்றுதல் வேண்டும்.

(7) மூன்றாம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் காரணம் காட்டுவதற்கு உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய கட்டளையை ஆக்கியதிலிருந்து இரு வார காலப்பகுதியொன்றினுள் அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் அவர் தோன்றுல் வேண்டும் என்பதுடன் கட்டளை புறத்தொதுக்கப்படுவதற்கு அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான முறையில் திரிபுபடுத்தப்படுவதற்கு பிரேரித்தலும் வேண்டும்.

(8) மூன்றாம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர், கட்டளையுடன் இணங்கியொழுகாவிடின் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவானின் முன்னர் தோன்றாவிடின் அவர் (10) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் அக்கட்டளையானது முற்றான தாக்கப்படுதலும் வேண்டும்.

(9)(அ) அத்தகைய இணைய இடையீட்டாளர் மனு மற்றும் சத்தியக்கடதாசி என்றவகையாக காரணம் காட்டுவதற்கு (7) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுகின்றவிடத்து, நீதிவான் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்; அவ்விசாரணை, விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் முடிவுறுதல் வேண்டும்.

(ஆ) நீதிவான், (3) ஆம் உட்பிரிவின் கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளரினால்

கூறப்பட்ட நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு, இப்பிரிவின் கீழான கட்டளை நியாயமானதாகவும் முறையானதாகவும் இல்லையென அவர் திருப்திப்படின், ஒன்றில் கட்டளை புறத்தொதுக்கப்படுவதற்கு அல்லது திரிபுபடுத்தப்படுவதற்கு பிரேரிக்கலாம் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தோதான கட்டளையொன்றையும் ஆக்கலாம்.

(இ) நீதிவான் அவ்வாறு திருப்திப்படாவிடின். (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) மூன்றாம் உட்பிரிவின் கீழான கட்டளை (ஆ) என்னும் பந்தியின் கீழ் திரிபுபடுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(10) இப்பிரிவின் கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக ஏதேனும் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் நீதிவானினால் கட்டளையிடப்படும் காலப்பகுதியினுள்ளும் முறையிலும் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.

இன்னலுற்ற ஆள் ஆளடையாளத் தகவலின் வெளிவிடுகையை நாடுதல்

**26.** (1) தடைசெய்யப்பட்ட கூற்றொன்றின் தொடர்பாடல் மூலம் இன்னலுறுகின்ற எவரேனும் ஆள், மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கு அல்லது தன்னியக்கச் செய்நிரலைப் பயன்படுத்தி அத்தகைய கூற்றை அறிவிப்பதற்கு நிகழ்நிலை அமைவிடத்தைப் பயன்படுத்திய ஆளின் ஆளடையாளம் அல்லது அமைவிடம் சம்பந்தமான ஏதேனும் தகவலை வெளிவிடுமாறு எந்த இணைய இடையீட்டாளரின் நிகழ்நிலை அமைவிடத்தின் மீது அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டதோ அந்த நிகழ்நிலை அமைவிடத்தின் இணைய இடையீட்டாளரைப் பணிக்கும் கட்டளையொன்றுக்காக அத்தகைய இன்னலுற்ற ஆள் வசிக்கின்ற நியாயாதிக்கத்தினுள் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட குடியியல் வழக்கொன்று என்ற வகையாக விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பெறுவதன் மேல், நீதிமன்றம்–

(அ) தடைசெய்யப்பட்ட கூற்றானது, அத்தகைய கூற்றினால் இன்னலுறுகின்ற ஆளினால், எந்த ஆளின் ஆளடையாளம் கண்டுபிடிக்கப்படமுடியாதோ அந்த ஆளொருவரினால் அறிவிக்கப்பட்டிருந்தால்;

(ஆ) எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக கட்டளை நாடப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் கபடமற்றமுறையிலாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி அத்தகைய கூற்றின் தொடர்பாடலில் சம்பந்தப்பட்டிருந்தால்;

(இ) நாடப்பட்ட தகவலானது, அத்தகைய கூற்றின் தொடர்பாடலினால் விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு தொடர்பான நிவர்த்தியை நாடுவதற்கான சட்ட வழக்கு நடவடிக்கைகளை தொடக்கிவைப்பதற்கு இன்னலுற்ற ஆளுக்கு அவசியமாகவிருப்பின்; அத்துடன்

(ஈ) வெளிவிடப்பட்ட அத்தகைய தகவலைப் பெறுவதற்கான இன்னலுற்ற ஆளின் உரிமை ஆளடையாளம் காணுவதற்கு நாடப்பட்ட ஆளின் ஏதேனும் எதிரீட்டு உரிமை அல்லது அக்கறையைவிட மேலோங்கப் படின்,

இன்னலுற்ற ஆளினால் கோரப்பட்டவாறான தகவலை வெளிவிடுமாறு இணைய இடையீட்டாளர் ஒருவருக்கு கட்டளையிடலாம்.

*குறித்த சில விடயங்களில் இணையச் சேவை வழங்குநர்களின் பொறுப்பிலிருந்தான விலக்களிப்பு*

**27.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும், பின்வரும் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகின்ற ஆளொருவர், அத்தகைய ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும், தொழிற்படுத்தப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் நிகழ்நிலை அமைவிடத்தினூடாக புழக்கத்தில் விடப்பட்ட தடைசெய்யப்பட்ட கூற்றொன்றின் தொடர்பாடல் தொடர்பாக அல்லது அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்தினூடாக இச்சட்டத்தின் கீழ் தவறொன்றாக

அமைகின்ற, வேறு எவரேனும் திறத்தவரினாலான ஏதேனும் தடைசெய்யப்பட்ட கூற்றை உள்ளடக்கிய தொடர்பாடல் இணைப்பொன்றை இறுதிப் பயனர்களுக்கு கிடைக்கக்கூடிய தாகவாக்குவதற்காக அல்லது அத்தகைய தொடர்பாடலினால் அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் முறைகேடான இழப்புக்கு செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நட்டஈட்டுக்காக பொறுப்பு எதனையும் கொண்டிருத்தலாகாது:-

(அ) ஓர் இணைய இடையீட்டாளர் சேவை;

(ஆ) ஒரு தொலைத்தொடர்பாடல் சேவை;

(இ) இணையத்துக்கான பகிரங்க அணுக்கத்தை வழங்கும் ஒரு சேவை; அல்லது

(ஈ) கணிப்பீடு செய்யும் வளச் சேவை;

(உ) மின்னஞ்சல்களானவை அத்தகைய சேவையினால் இயலச் செய்யும் பயனரினால் தோற்றுவிக்கப்பட்ட உள்ளீடாக மட்டுமிருப்பின் ஒரு மின்னஞ்சல் சேவை;

(ஊ) குறுஞ்செய்திச் சேவை (குசெசே) அல்லது பல்லூடகச் செய்திச் சேவை (பசெசே) ஒன்று பின்வருமாறு இருப்பின் -

(i) அத்தகைய குறுஞ்செய்திகள் அத்தகைய சேவையினால் இயலச்செய்யும் பயனரினால் தோற்றுவிக்கப்பட்ட உள்ளீடாக மட்டுமிருப் பின்;

(ii) அத்தகைய பல்லூடக செய்திகள் அத்தகைய சேவையினால் இயலச்செய்யும் பயனரினால் தோற்றுவிக்கப்பட்ட உள்ளீடாக மட்டுமிருப் பின்; அல்லது

(iii) அத்தகைய குறுஞ்செய்திகள் மற்றும் பல்லூடக செய்திகள் அத்தகைய சேவையினால் இயலச் செய்யும் பயனரினால் தோற்றுவிக்கப்பட்ட உள்ளீடாக மட்டுமிருப்பின்,

(எ) ஒன்றுக்கொன்றான நேரடி கேளொலி தொடர்பாடல் அத்தகைய சேவையினால் இயலச்செய்யும் பயனரினால் தோற்றுவிக்கப்பட்ட உள்ளீடாக மட்டுமிருப்பின் அத்தகைய ஒன்றுக்கொன்றான நேரடி கோளொலி தொடர்பாடல் சேவை.

(2) (அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சேவையின் மீது அறிவிக்கப்பட்ட ஒரு பொய்யான கூற்று, தடைசெய்யப்பட்ட கூற்று அல்லது விடயம் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அகற்றப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) ஏதேனும் விடயம் மூன்றாம் திறத்தவர்களினால் பதிவேற்றப்பட்டுள்ளவிடத்து அல்லது தலையிடப் பட்டுள்ளவிடத்து,

நிகழ்நிலைக் கணக்கொன்றின் சொந்தக்காரர் அல்லது இணையச் சேவை வழங்குநர் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்று அல்லது விடயம் தொடர்பாக பொறுப் பெதனையும் கொண்டிருத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட பொறுப்பிலிருந்தான விலக்களிப்பு, அத்தகைய ஆள்-

(அ) தொடர்பாடலை தொடக்கி வைத்திருந்தால்;

(ஆ) தொடர்பாடலின் இறுதிப்பயனரைத் தெரிவு செய்திருந் தால்;

(இ) தொடர்பாடலின் உள்ளீட்டை தெரிவு செய்திருந்தால் அல்லது திரிபுபடுத்தியிருந்தால்; அல்லது

(ஈ) அத்தகைய சேவையை வழங்குவதில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன், அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது விதி அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்ற வகையாக ஆணைக்குழு வினால் வழங்கப்பட்ட செயன்முறைக் கோவையுடன் இணங்கியொழுகாதிருந்தால்,

ஏற்புடையதாதலாகாது.

(4) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் என்றவயைாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இயைபான செயல்முறைக் கோவைக்கு அமைந்தொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் மற்றும் அதனால் வேறு எவரேனுமாளுக்கு முறைகேடான இழப்புகள் ஏற்படுகின்றது எனும் போது அத்தகைய இழப்பினால் பாதிப்புற்ற ஆளுக்கு நட்டஈடு என்ற வகையாக இழப்புகளைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கத்துக்காக-

''கணிப்பீடுசெய்யும் வளச்சேவை'' என்பது, ஒரு இணைய இடையீட்டாளர் சேவையின், தொலைத்தொடர்பாடல் சேவையின் அல்லது இணையத்துக்கான பொதுமக்களுக் கான அணுக்கத்தை வழங்கும் ஒரு சேவையின் பயன் பாட்டின் மூலம் தவிர்ந்த எவையேனும் வழிவகைகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு ஆளொருவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் இணையச் சேவையை உள்ளடக்கும்;

''தொலைத்தொடர்பு சேவை'' என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தில் உள்ள அத்தகைய பதத்துக்கு குறித்தளிக்கப் பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பாகம் V

**வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடங்கள்**

வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடங்கள்

**28.** (1) (அ) நிபந்தனையுடனான கட்டளைகள் எந்த நிகழ்நிலை அமைவிடம் தொடர்பில் 24 ஆம் பிரிவின்கீழ் நீதிவானினால் முற்றானதாக ஆக்கப்பட்டதோ அந்த நிகழ்நிலை அமைவிடமொன்றின்மீது இலங்கையில் உள்ள இறுதிப் பயனர்களுக்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு தடைசெய்யப்பட்ட கூற்றுக்கள் அறிவிக்கப்பட்டிருப்பின்; அத்துடன்

(ஆ) அத்தகைய கூற்றுக்களின் ஆகக்குறைந்தது மூன்று கூற்றுக்கள், இப்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்படும் தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களினுள் அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்தின் மீது இலங்கையில் உள்ள இறுதிப் பயனர்களுக்கு முதலாவதாக அறிவிக்கப்பட்டிருப்பின்,

ஆணைக்குழு அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்தை "வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடம்" ஒன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, கூற்றொன்று இன்னொரு கூற்றிலிருந்து முக்கியமான விபரமொன்றில் வேறுபட்டதாகவிருப்பின் அது அவ்வேறு கூற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட வெளிப்படுத்துகையொன்று பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) நிகழ்நிலை அமைவிடத்தின் சீவஇ, ஆள்களப் பெயர் அல்லது வேறு ஏதேனும் தனித்துவமான அடையாளங் காணி;

(ஆ) நீதிவான் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட இயைபான கட்டளைகள்;

(இ) எந்தத் தேதியன்று வெளிப்படுத்துகை பயனுறுகின்றதோ அந்தத் தேதி;

(ஈ) எந்தத் தேதியன்று வெளிப்படுத்துகை முடிவுறுகின்றதோ அந்தத் தேதி; அது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேதியின் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாததாகவிருத்தலாகாது;

(உ) நிகழ்நிலை அமைவிடத்தை அணுகுகின்ற இலங்கையிலுள்ள எவரேனும் இறுதிப் பயனருக்கு வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அறிவிப்பதற்கான, இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி நிகழ்நிலை அமைவிடத்தின் சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கான அறிவித்தல் ஒன்று, நிகழ்நிலை அமைவிடமானது வெளிப்படுத்துகையொன்றின் விடயம் என, அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலான அறிவித்தல் ஒன்று; அத்துடன்

(ஊ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட வெளிப்படுத்துகையொன்று-

(அ) (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்கு இணங்க அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று; அல்லது

(ஆ) ஆணைக்குழுவினால் அது இல்லாதாக்கப்படுகின்ற அல்லது புறத்தொதுக்கப்படுகின்ற தேதியன்று,

இவற்றுள் எத்தேதி முன்னதாக உள்ளதோ அத்தேதியன்று முடிவுறலாம்.

(5) வெளிப்படுத்துகையொன்று செய்யப்பட்டதன் பின்னர் சாத்தியமானளவு விரைவாகவும் அது பயனுறும் தேதிக்கு முன்னரும், ஆணைக்குழு -

(அ) இப்பிரிவின் கீழ் வெளிப்படுத்துகையொன்று வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு; அத்துடன்

(ஆ) எந்த நிகழ்நிலை அமைவிடத்துடன் வெளிப்படுத்துகை தொடர்புபடுகின்றதோ அந்த நிகழ்நிலை அமைவிடத்தின் URL, ஆள்களப்பெயர் அல்லது வேறு ஏதேனும் தனித்துவமான அடையாளங்காணியை குறிப்பிட்டு,

விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வர்த்தமானியில் அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(6) (அ) வெளிப்படுத்துகையானது நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படின், நிகழ்நிலை அமைவிடத்தின் அத்தகைய சொந்தக்காரரின் அல்லது தொழிற்பாட்டாளரின் கடைசியாக அறியப்படும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படின் அல்லது அத்தகைய ஆளுக்கு இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்து ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய வேறு தோதான முறை மூலம் சேர்ப்பிக்கப்படின், வெளிப்படுத்துகை சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) வெளிப்படுத்துகையானது எந்த நிகழ்நிலை அமைவிடத்தினூடாக அத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த நிகழ்நிலை அமைவிடத்தின் சொந்தக்காரரின் அல்லது தொழிற்பாட்டாளரின் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சமூக ஊடக கணக்குக்கு அனுப்பப்படுகின்றவிடத்து அத்தகைய வெளிப்படுத்துகை இலத்திரனியல் வழிவகைகள் மூலம் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் (3) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அறிவித்தலொன்றை அறிவிப்பதற்கான அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, ஆணைக்குழு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள்-

(அ) அத்தகைய வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்துக்கு இலங்கையில் உள்ள இறுதிப்பயனர்களினாலான அணுக்கத்தை இயலாமலாக்குவதற்கு;

(ஆ) அந்நிகழ்நிலை அமைவிடம் வெளிப்படுத்துகையொன்றின் விடயமாகவுள்ளது என வெளிப்படுத்தும் அறிவித்தலொன்றை அத்தகைய வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்தை அணுகுகின்ற இலங்கையிலுள்ள எல்லா இறுதிப்பயனர்களுக்கும் அறிவிப்பதற்கு; அத்துடன்

(இ) நீதிவான் தகுதியானதென கருதுகின்றவாறான வேறு ஏதேனும் கட்டளைக்கு,

சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளரைப் பணிக்கும் கட்டளையொன்றுக்காக நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம்.

(8) அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட்கொண்டதன்மேல், நீதிவான், (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் ஏற்புடைய தாக்கப்பட்ட பணிப்புக்களைக்கொண்டு வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் மீது நிபந்தனையுடனான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கலாம் –

(அ) வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்துக்கு இலங்கையிலுள்ள இறுதிப்பயனர்களினாலான

அணுகுகையை இயலாமலாக்குவதற்கு தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளரின் பெயர்;

(ஆ) மூன்றாம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலை அறிவிக்கும் முறை; அத்துடன்

(இ) கட்டளையைச் சேர்ப்பித்ததன் பின்னர் அத்தகைய அறிவித்தல் வெளியிடப்படவேண்டிய காலப்பகுதி.

(10) எட்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அக்கட்டளை நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படின், அத்தகைய ஆளின் கடைசியாக அறியப்படும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படின் அல்லது அத்தகைய ஆளுக்கு இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்தும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் நீதிவானால் முறையானது என கருதப்படும் வேறு ஏதேனும் முறை மூலம் சேர்ப்பிக்கப்படின், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு எதிராக கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் மீது சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(11) எட்டாம் உட்பிரிவின்கீழ், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடம் ஒன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் ஒன்றில் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அல்லது அக்கட்டளையானது ஏன் முற்றானதாக்கப்படுதலாகாது எனக் காரணம் காட்டுவதற்கு (12) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நீதிவான் முன்னர் தோன்றுதல் வேண்டும்.

(12) எட்டாம் உட்பிரிவின்கீழ், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் காரணம் காட்டுவதற்கு உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய கட்டளையை ஆக்கியதிலிருந்து இரண்டு வார காலப் பகுதியொன்றினுள் அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் தோன்றுதல் வேண்டுமென்பதுடன் கட்டளை புறத்தொதுக்கப் படுவதற்கு அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப் பட்டவாறான முறையில் திரிபுபடுத்தப்படுவதற்கு பிரேரித்தலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், (8) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப் படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடம் ஒன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர், இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நீதிவானினால் அத்தகைய கட்டளை புறத்தொதுக்கப்படும்வரை அல்லது திரிபுபடுத்தப்படும்வரை அத்தகைய கட்டளையை ஆக்கும் தேதியிலிருந்து அக்கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்கு பிணிக்கப்படுதல் வேண்டும்.

(13) எட்டாம் உட்பிரிவின்கீழ், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு எதிராக கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் கட்டளையுடன் இணங்கியொழுகாவிடின் அல்லது (12) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் முன்னர் தோன்றாவிடின் அத்தகைய ஆள் (15) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் கட்டளையானது முற்றானதாக்கப்படுதலும் வேண்டும்.

(14) (அ) வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் அத்தகைய சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் மனு மற்றும் சத்தியக்கடதாசி என்ற வகையாக காரணம் காட்டுவதற்கு (12) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நீதிவான் முன்னர் தோன்றுகின்ற

விடத்து, நீதிவான் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்; அவ்விசாரணை, விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் முடிவுறுதல் வேண்டும்.

(ஆ) நீதிவான், (8) ஆம் உட்பிரிவின்கீழ், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளை யொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளரினால் கூறப்பட்ட நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டு, இப்பிரிவின் கீழான கட்டளை நியாயமானதாகவும் முறையானதாகவும் இல்லையென அவர் திருப்திப்படின் ஒன்றில் கட்டளை புறத்தொதுக்கப்படுவதற்கு அல்லது திரிபுபடுத்தப்படு வதற்கு பிரேரிக்கலாம் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய தோதான கட்டளையொன்றையும் ஆக்கலாம்.

(இ) நீதிவான் அவ்வாறு திருப்திப்படாவிடின், (8) ஆம் உட்பிரி வின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) எட்டாம் உட்பிரிவின் கீழான கட்டளை (ஆ) என்னும் பந்தியின்கீழ் திரிபுபடுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(15) இப்பிரிவின்கீழ், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் எந்த சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட் டாளருக்கு எதிராக கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த சொந்தக் காரர் அல்லது தொழிற்பாட்டாளர் நீதிவான் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படும் காலப்பகுதியினுள்ளும் முறையிலும் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, வெளிப் படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் அத்தகைய சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஆறு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் நீதிவான் நீதிமன்றம் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்துக்கான

இலங்கையிலுள்ள இறுதிப்பயனர்களினாலான அணுக்கத்தை இயலாமலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக் குழுவைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(16) (அ) ஆணைக்குழு -

(அ) அதன் சொந்த முன்னெடுப்பின் மீது; அல்லது

(ஆ) (i) வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்தின் சொந்தக்காரரினாலான அல்லது தொழிற்பாட்டாளரினாலான; அல்லது

(ii) நிகழ்நிலை அமைவிடத்தின்மீதான பதிப்பகக் கட்டுப்பாட்டுடனான எவரேனும் ஆளினாலான,

விண்ணப்பமொன்றின் மீது,

ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட வெளிப்படுத்துகையொன்றை எச்சந்தர்ப்பத்திலும் இடைநிறுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(17) பதினாறாம் பிரிவின் நோக்கத்துக்காக ஆளொருவர் -

(அ) ஏதேனும் கூற்று நிகழ்நிலை அமைவிடமொன்றின்மீது உள்ளடக்கப்படலாமா அல்லது தவிர்க்கப்படலாமா; அல்லது

(ஆ) நிகழ்நிலை அமைவிடம் பற்றிய ஏதேனும் கூற்றை எங்கு இடுவது என,

தீர்மானிப்பதற்கு இயலுமானவராகவிருப்பின், அவ்வாள் "நிகழ்நிலை அமைவிடமொன்றின் மீதான பதிப்பகக் கட்டுப்பாட்டைக்" கொண்டிருக்கிறார்.

(18) பதினாறாம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று இடைநிறுத்தப்படுவதன்மேல், வேறுபடுத்தப்படுவதன்மேல், அல்லது இல்லாதாக்கப்படுவதன்மேல், ஆணைக்குழு -

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் இடைநிறுத்தல், வேறுபடுத்துகை அல்லது இல்லாதாக்குதல் பற்றிய அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்தின் சொந்தக்காரர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்றை வழங்குவதற்கு நியாயமான முயற்சிகளைச் செய்தல் வேண்டும்.

குறித்தசில ஆட்கள் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடங்கள் முதலியன மீதான கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீட்டை இலங்கையில் அறிவித்தலாகாது

**29.** (1) இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்று எத்தேதியன்று பயனுடையதாக வருகின்றதோ அத்தேதியன்று தொடங்கும் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றின் பின்னர், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின்மீது இணையச் சேவை வழங்குநர் ஒருவர் உள்ளடக்குகின்ற அல்லது உள்ளடக்குவதனைச் செய்விக்கின்ற ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு, வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்தின்மீது இலங்கையில் அறிவிக்கப்படுவதில்லை என உறுதிப்படுத்துவதற்கு (இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் ஆகிய இரண்டிலும்) அவர் நியாயமான நடவடிக்கைளை எடுத்தல் வேண்டும்.

(2) இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்று எத்தேதியன்று பயனுடையதாக வருகின்றதோ அத்தேதியன்று தொடங்கும் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றின் பின்னர், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் மீது இணைய இடையீட்டாளர் ஒருவர் உள்ளடக்குகின்ற அல்லது உள்ளடக்குவதனைச் செய்விக்கின்ற ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு, வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்தின்மீது இலங்கையில் அறிவிக்கப்படுவதில்லை என உறுதிப்படுத்துவதற்கு (இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் ஆகிய இரண்டிலும்) அவர் நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(3) இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்று எத்தேதியன்று பயனுடையதாக வருகின்றதோ அத்தேதியன்று தொடங்கும் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றின் பின்னர், இணைய இடையீட்டாளர் ஒருவராகச் செயலாற்றும் போது, அவர், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றுக்கு பிரசித்தமளிக்கின்ற அல்லது வேறு வகையாக அதனை மேம்படுத்துகின்ற ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு பற்றி இலங்கையில் தொடர்பாடலுக்கு வசதியளிக்கவில்லையென உறுதிப்படுத்துவதற்கு (இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் ஆகிய இரண்டிலும்) அவ்விணைய இடையீட்டாளர் நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(4) இணையச் சேவை வழங்குநர் ஒருவர் அல்லது இணைய இடையீட்டாளர் ஒருவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருப்பின், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின்மீது அவர் உள்ளடக்குகின்ற அல்லது உள்ளடக்குவதனைச் செய்விக்கின்ற ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு, வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடத்தின்மீது இலங்கையில் அறிவிக்கப்படுவதில்லை என உறுதிப்படுத்துவதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக விடயத்துக்கேற்ப, (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அவர் கருதப்படுதல் வேண்டும்.

(5) இணைய இடையீட்டாளர் ஒருவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருப்பின், அவ்வுட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு, இலங்கையில் அறிவிக்கப்படுவதற்கு அவர் வசதியளிப்பதில்லை என உறுதிப்படுத்துவதற்கு நியாயமான நடவடிக்கைகளை அவர் எடுத்திருப்பதாக (3) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக கருதப்படுகின்றார்.

(6) ஓராம், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண

மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பு ஏற்படும் பட்சத்தில், அத்தகைய மறியற்றண்டனைக் காலம் அல்லது குற்றப்பணம் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்.

வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிட மொன்றை தொழிற் படுத்துவதிலிருந்து நன்மைகளைப் பெறுவதன் மீதான தடை

**30.** (1) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றை தொழிற்படுத்துவதற்கான ஊக்குவிப்பு அல்லது அளிப்பொன்றாக ஏதேனும் நிதிசார் அல்லது வேறு பொருள்சார் நன்மையை பரிந்து கேட்கின்ற, பெறுகின்ற அல்லது அதனைப் பெறுவதற்கு அல்லது உடன்படுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மீது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பு ஏற்படும் பட்சத்தில் அத்தகைய மறியற்றண்டனைக்காலம் அல்லது குற்றப் பணம் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்.

(2) நீதிமன்றமொன்று இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கு எவரேனும் ஆளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கின்றவிடத்து, அந்நீதிமன்ற மானது, (1) ஆம் உட்பிரிவில் உள்ள தண்டனையை அவ்வாளின் மீது விதிப்பதற்கு மேலதிகமாக, இப்பிரிவின்கீழான தவறொன் றைப் புரிவதனூடாக கொள்ளப்பட்ட எவையேனும் சொத்துக்களை இழப்பீடு செய்யும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

வெளிப்படுத்தப் பட்ட நிகழ்நிலை அமைவிடங்க ளுக்கு நிதிசார் ஆதரவை வழங்குவதன் மீதான தடை

**31.** (1) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, ஏதேனும் ஆதனத்தின் செலவினம் அல்லது பயன்படுத்துகை வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிட மொன்றின்மீது இலங்கையில் உள்ள இறுதிப் பயனர்களுக்கு தடை செய்யப்பட்ட கூற்றுக்கள் அறிவிக்கப்படுவதற்கு ஆதரவளிக்கின்றது, உதவுகின்றது அல்லது மேம்படுத்துகின்றது என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணத்தைக் கொண்டு அவ்வாதனத்

தைச் செலவுசெய்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன் மீது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக் கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத் தீர்ப்பு ஏற்படும் பட்சத்தில் அத்தகைய மறியற்றண்டனைக்காலம் அல்லது குற்றப்பணம் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டும் இரட்டிப்பாக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடமொன்றின் மீது இலங்கையில் ஏதேனும் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீட்டை அறிவிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் பிரதிபயனை வழங்குகின்ற இணையச் சேவை வழங்குநர் ஒருவருக்கு அல்லது இணைய இடையீட்டாளர் ஒருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) நீதிமன்றமொன்று இப்பிரிவின்கீழான தவறொன்றுக்கு எவரேனும் ஆளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கின்றவிடத்து, அந்நீதிமன்ற மானது, (1) ஆம் உட்பிரிவில் உள்ள தண்டணையை அவ்வாளின் மீது விதிப்பதற்கு மேலதிகமாக, இப்பிரிவின்கீழான தவறொன்றை புரிவதன்மூலம் ஏதேனும் ஆதனத்தை செலவுசெய்தல் அல்லது பயன்படுத்துவதினூடாக கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனத்தை இழப்பீடு செய்யும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "ஆதனம்" என்பது, வழக்கில் உள்ள பொருட்கள் மற்றும் வேறு அருவ அல்லது பருப்பொருள்சாரா ஆதனம் உட்பட பணம் மற்றும் வேறு எல்லா அசையும் அல்லது அசையா ஆதனம் எனப் பொருள்படும்.

பாகம் VI

## மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்குகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மெய்யுறுதிப்படுத்தப்படாத நடத்தைக்கு எதிர்ச் செயலாற்றுதல்

மெய்யுறுதிப் படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்குகள் மற்றும் ஒருங்கிணைக் கப்பட்ட மெய்யுறுதிப் படுத்தப் படாத நடத்தைக்கு எதிர்ச் செயலாற்றுதல்

**32.** (1) இரண்டாம் உட்பிரிவில் உள்ள நிபந்தனைகள் திருப்திப் படுத்தப்படின், ஆணைக்குழு அறிவித்தல் ஒன்றில் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதிக்கு பின்வருவனவற்றினுள் ஒன்றை அல்லது அவை இரண்டையும் செய்யுமாறு தேவைப்படுத்தி இணைய இடையீட்டாளர் ஒருவருக்கு எழுத்தில் அத்தகைய அறிவித்தலை வழங்கலாம்:-

(அ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிகழ்நிலைக் கணக்குகளினூடாக இலங்கையில் ஏதேனும் தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவிப்பதற்கு அதன் சேவைகள் பயன்படுத்தப்படுவதனை அனுமதிக் காதிருத்தல்;

(ஆ) இலங்கையில் உள்ள அதன் இணைய இடையீட்டாளர் சேவையின் எவரேனும் இறுதிப் பயனருடன் இடைச் செயலாற்றுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிகழ்நிலை கணக்குகளை எவரேனும் ஆள் பயன்படுத்துவதனை அனுமதிக் காதிருத்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) அத்தகைய நிகழ்நிலைக் கணக்கு அல்லது கணக்குகள் எந்த இணைய இடையீட்டாளர் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளரிடம் உருவாக்கப்பட்டி ருத்தல் வேண்டும்;

(ஆ) ஒன்றில் தடைசெய்யப்பட்ட கூற்றொன்று குறித்துரைக் கப்பட்ட நிகழ்நிலைக் கணக்கைப் பயன்படுத்தி இலங்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட மெய்யுறுதிப்படுத்தப்படாத நடத்தை குறித்துரைக்கப்பட்ட நிகழ்நிலை கணக்கைப் பயன்படுத்தி இலங்கையில் நிறைவேற்றப்பட்டிருக் கிறது; அத்துடன்

(இ) நிகழ்நிலைக் கணக்கானது மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கொன்றாகவுள்ளது அல்லது தன்னியக்கச் செயல்நிரலொன்றினால் கட்டுப்படுத்தப் படுகின்றது என ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

(3) அறிவித்தலானது, அவ்வறிவித்தல் நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படின், இணைய இடையீட்டாளரின் கடைசியாக அறியப்படும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படின் அல்லது அத்தகைய ஆளுக்கு இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்து ஆணைக்குழுவினால் முறையானது என கருதப்பட்ட வேறு ஏதேனும் முறை மூலம் சேர்ப்பிக்கப்படின், அத்தகைய இணைய இடையீட்டாளருக்கு சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒராம் ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்று இணங்கியொழுகப்படாதவிடத்து, ஆணைக்குழு நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட்கொண்டதன்மேல், நீதிவான் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் ஏற்புடையதாக்கப்பட்ட பணிப்புகளைக்கொண்டு இணைய இடையீட்டாளர் மீது நிபந்தனையுடனான கட்டளையொன்றை வழங்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அதற்கு-

(அ) திட்டவட்டமற்ற காலத்துக்கு; அல்லது

(ஆ) மூன்று மாதங்களை விஞ்சாத குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு,

பயனுள்ளது என குறித்துரைத்தல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அக்கட்டளை நேரடி ஒப்படைப்பு மூலம் சேர்ப்பிக்கப்படின், அத்தகைய ஆளின் கடைசியாக அறியப்படும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படின் அல்லது அத்தகைய ஆளுக்கு இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அல்லது விடயத்தின் தன்மையைப் பொறுத்தும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் நீதிவானினால் முறையானது என கருதப்பட்ட வேறு ஏதேனும் முறை மூலம் சேர்ப்பிக்கப்பட்டிருப்பின், எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக அக்கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் மீது சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) நான்காம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் ஒன்றில் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் அல்லது அக்கட்டளையானது ஏன் முற்றானதாக்கப்படுதலாகாது எனக் காரணம் காட்டுவதற்கு (8) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நீதிவான் முன்னர் தோன்றுதல் வேண்டும்.

(8) நான்காம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் காரணம் காட்டுவதற்கு உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய கட்டளையை ஆக்கியதிலிருந்து இரண்டு வார காலப்பகுதியினுள் அக்கட்டளையை ஆக்கும் நீதிவானுக்கு முன்னர் அவர் தோன்றுதல் வேண்டும் என்பதுடன் கட்டளை புறத்தொதுக்கப்படுவதற்கு அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான முறையில் திரிபுபடுத்தப்படுவதற்கு பிரேரித்தலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், (4) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் இணைய இடையீட்டாளர் இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நீதிவானினால் அத்தகைய கட்டளை புறத்தொதுக்கப்படும்வரை அல்லது திரிபுபடுத்தப்படும்வரை அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக அக்கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்கு பிணிக்கப்படுதல் வேண்டும்.

(9) நான்காம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் கட்டளையுடன் இணங்கியொழுகாவிடின் அல்லது (8) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிவான் முன்னர் தோன்றாவிடின், அவர் (11) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் கட்டளையானது முற்றானதாக்கப்படுதலும் வேண்டும்.

(10) (அ) அத்தகைய இணைய இடையீட்டாளர் (8) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நீதிவான் முன்னர் மனு மற்றும் சத்தியக்கடதாசி என்ற வகையாக காரணம் காட்டுவதற்கு தோன்றுகின்றவிடத்து, நீதிவான் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்; அவ்விசாரணை, விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் முடிவுறுதல் வேண்டும்.

(ஆ) நீதிவான், (4) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக நிபந்தனையுடனான கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளரினால் கூறப்பட்ட நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு, இப்பிரிவின்கீழான கட்டளை நியாயமானதாகவும் முறையானதாகவும் இல்லை என அவர் திருப்திப்படின், ஒன்றில் கட்டளை புறத்தொதுக்கப்படுவதற்கு அல்லது திரிபுபடுத்தப்படுவதற்கு பிரேரிக்கலாம் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தோதான கட்டளை ஒன்றையும் ஆக்கலாம்.

(இ) நீதிவான் அவ்வாறு திருப்திப்படாவின், (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) நான்காம் உட்பிரிவின்கீழான கட்டளை (ஆ) என்னும் பந்தியின்கீழ் திரிபுபடுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய கட்டளை முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(11) இப்பிரிவின்கீழ் எந்த இணைய இடையீட்டாளருக்கு எதிராக கட்டளை ஆக்கப்படுகின்றதோ அந்த இணைய இடையீட்டாளர் நீதிவானினால் கட்டளையிடப்படும் காலப்பகுதியினுள்ளும் முறையிலும் அத்தகைய கட்டளையுடன் இணங்கியொழுகத்தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் நீதிவான் வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இலங்கையினுள் தடைசெய்யப்பட்ட கூற்றுக்கான அணுக்கத்தை தடுப்பதன் மூலம் அத்தகைய கட்டளையை வலுவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆணைக்குழுவைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்கலாம்.

## பாகம் VII

## புலனாய்வுகளுக்கு உதவுவதற்காக நிபுணர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் தத்துவங்கள்

**33.** (1) அமைச்சர், நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புலனாய்வுசெய்வதில் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு (இதனகத்துப்பின்னர் "நிபுணர்" ஒருவர் எனக் குறிப்பீடுசெய்யப்படுபவரும்), இலத்திரனியல் பொறியியலில் அல்லது மென்பொருள் தொழினுட்பவியலில் தேவைப்பட்ட

*புலனாய்வுகளுக்கு உதவுவதற்காக நிபுணர்களை நியமித்தல்*

*தகைமையையும் அனுபவத்தையும் கொண்டவருமான எவரேனும் பகிரங்க அலுவலரை அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது ஓர் அரசாங்கக் கம்பெனியின் ஓர் ஊழியரை நியமிக்கலாம்.*

*(2)* இப்பிரிவின் நோக்கங்களுக்காக–

''*நிபுணர்*'' என்பது,–

*(அ)* விதித்துரைக்கப்பட்ட தகைமையை உடையவரும் இயைபான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான ஏதேனும் பல்கலைக்கழகத்தின் பணியாட் டொகுதி உறுப்பினரை உள்ளடக்கும்;

*(ஆ)* இயைபான பல்கலைக்கழகத்தின் அபிப்பிராயத்தில் விதித்துரைக்கப்பட்ட தகைமையை உடையதும் அத்தகைய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டதுமான ஏதேனும் பகிரங்க நிறுவனத்தை உள்ளடக்கும்:

ஆயின், மேலே (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி ஒரு ''நிபுணரை'' அடையாளங் காணமுடியாதவிடத்து, அமைச்சர், இயைபான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் கலந்தாலோசனையுடன் விதித்துரைக்கப்பட்ட தகைமையைத் திருப்திப்படுத்துகின்ற வேறேதேனும் நிறுவனத்தை நியமிக்கலாம்;

''*அரசாங்கக் கம்பெனி*'' என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை அக்கம்பெனியின் பங்குகளில் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு

மேற்பட்டதை அதில் வைத்திருக்கின்றதுமான ஒரு கம்பெனி என்று பொருளாகும் ;

"பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகம் என்று பொருளாகும்.

(3) (நிபுணத்துவத்தின் குறிப்பிட்ட துறைகளைக் கருத்திற் கொண்டு) (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலரொருவரினால் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட தகைமையையும் அனுபவமும் மற்றும் அத்தகைய அலுவலரின் நியமன முறையும் விதமும் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு அழைக்கப்பட்ட நிபுணரொருவர் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) உப பரிசோதகர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலருடன் எவையேனும் வளவுகளினுட் பிரவேசிப்பதற்கும்;

(ஆ) ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது அத்தகைய வேறேதேனும் காரியத்தைச் செய்வதற்கு ஏதேனும் தகவல் முறைமையை, கணினியை அல்லது கணினி முறைமையை அல்லது அத்தகைய கணினியில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தை எவையேனும் தரவுகளை அல்லது தகவல்களை அணுகுவதற்கும்;

(இ) எவையேனும் போக்குவரத்துத் தரவுகளை வெளிக்காட்டும் எவரேனுமாளைத் தேவைப்படுத்துவதற்கும்;

(ஈ) எவரேனுமாளை வாய்மொழிமூலமாக விசாரணை செய்வதற்கும்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்வதற்கும்.

(5) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய ஊதியம் நிபுணரொருவருக்குச் செலுத்தப் படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்வதில் ஆணைக்குழுவுக்கு அல்லது எவரேனும் பொலிசு அலுவலருக்கு உதவுவதற்கு நிபுணரொருவர் அழைக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய எல்லா உதவிகளையும் அளித்தல் நிபுணரின் கடமையாதலும் வேண்டும். ஒரு புலனாய்வின் கண்டு பிடிப்புக்களின் விளைவாக எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய புலனாய்வின்போது நிபுணரினால் பெற்றுக்கொள்ளக்கூடிய எவையேனும் தகவல்களை, தரவுகளை, விடயத்தை அல்லது வேறு கருமத்தை அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகக் கிடைக்கக்கூடியன வாக்குதல் அவரது கடமையாதல் வேண்டும்.

புலனாய்வுகளுக்கு உதவுவதற்கான கடமை

**34.** இச்சட்டத்தின் கீழான தவறொன்று தொடர்பில் ஏதேனும் வெளிவிடுகையைச் செய்வதற்கு அல்லது புலனாய்வொன்றில் உதவுவதற்கு பொலிஸ் அலுவலர் ஒருவரின் அதிகாரத்தின்கீழ் நிபுணர் ஒருவரினால் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஆணைப்பத்திரத்துடன் தேடுகையிடல் மற்றும் கைப்பற்றுவதற்கான தத்துவங்கள்

**35.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பில் புலனாய்வொன்றுக்காக பொலிஸ் அலுவலர் ஒருவரினால் அத்தகைய நோக்கத்துக்காக செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிவான் ஒருவரினால் அதற்கென வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின்கீழ் அப்பொலிஸ் அலுவலருக்கு உதவுகின்ற நிபுணர் ஒருவர்,-

(அ) எவரேனும் இணையச் சேவை வழங்குநரின் உடைமையில் உள்ள ஒப்பப்பணம் செலுத்துநர் தகவல் மற்றும் போக்குவரத்துத் தரவு உட்பட்ட ஏதேனும் தகவலைப் பெறலாம்; அல்லது

(ஆ) ஏதேனும் கம்பி அல்லது இலத்திரனியல் தொடர்பாடலின் ஏதேனும் கட்டத்தில், ஒப்பப்பணம் செலுத்துநர் தகவல் மற்றும் போக்குவரத்துத் தரவு உட்பட அத்தகைய தொடர்பாடலை இடைமறிக்கலாம்.

(2) அமைச்சர், இச்சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பில் ஏதேனும் புலனாய்வு நோக்கங்களுக்காக, போக்குவரத்துத் தரவு உட்பட தரவு மற்றும் தகவலை வைத்திருத்தல் மற்றும் அவற்றை இடைமறித்தல் தொடர்பில் பின்பற்றப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட முறை மற்றும் நடவடிக்கைமுறைகளை ஒழுங்குவிதிமூலம் விதித்துரைக்கலாம்.

பாகம் VIII

## நிதி

**36.** (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆணைக் குழுவின் நிதியம்

(2) ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வேறு செலவினங்கள் இச்சட்டத்தின் நியதிகளின்படி நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது ஆணைக்குழுவின் பெறுகைகளும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு

**37.** பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பாகம் IX

**பொது**

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்

**38.** (1) இச்சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்ட வாறு தவிர, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான புலனாய்வுகள், வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தல், தவறுகள் பற்றிய விளக்கம் மற்றும் அத்தகைய ஏதேனும் விளக்கத்தில் விளம்பப்பட்ட தீர்ப்புகள், தண்டனைத் தீர்ப்புகள் மற்றும் கட்டளைகளிலிருந்தான மேன்முறையீடுகளுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட புலனாய்வுகளின்போது சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட் கொண்டதன்மீது, எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் திருப்திப்படுமிடத்து, அது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் நியதிகளின்படி குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**39.** (1) இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளையும் கேட்பதற்கான, விளங்குவதற்கான மற்றும் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கம் நீதிவான் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். நியாயாதிக்கம்

(2) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், தவறொன்றைப் புரிதல் தொடர்பில் மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது பொதுமக்கள் அமைதியின்மையை ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகள் நிலவுமிடத்து, குற்றப்பகர்வை நேரடியாக மேல்நீதிமன்றத்துக்கு அனுப்புவது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**40.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு அல்லது அத்தகைய தவறொன்று புரியப்படுவதனைச் செய்விப்பதற்கு எத்தனிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது அத்தகைய தவறுகள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகபட்ச காலத்தின் அரைவாசியை விஞ்சாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய தவறுகள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகபட்ச குற்றப்பணத்தின் அரைவாசியை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். தவறொன்றைப் புரிய எத்தனித்தல்

**41.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு உடந்தையளிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அதே முறையில் விளங்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, முதலாவது குறிப்பிடப்பட்ட தவறுக்கு இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும். இவ்வுட்பிரிவில், "உடந்தையளித்தல்" என்னும் சொல்லமைப்பு தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம் மற்றும் 101 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். தவறொன்றுக்கு உடந்தையளித்தல்

*தவறொன்றைப் புரிவதற்கு சதி செய்தல்*

**42.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு வேறு எவரேனும் ஆளுடன் சதிசெய்கின்ற ஆள் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அதே முறையில் விளங்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, முதலாவது குறிப்பிடப்பட்ட தவறுக்கு இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும். இப்பிரிவில், "சதிசெய்தல்" என்னும் சொல்லமைப்பு தண்டனைச் சட்டக்கோவையின் 113அ என்னும் பிரிவில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான தவறுகள் பிடியாணை யின்றி கைதுசெய்யத்தகாத மற்றும் பிணையிற் செல்தகு தவறுகளாதல் வேண்டும்.*

**43.** இச்சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும் -

(அ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பிடியாணையின்றி கைது செய்யத்தகாத தவறொன்றாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் கருத்தினுள் பிணையிற் செல்தகு தவறொன்றாதல் வேண்டும்.

*ஆட்கள் குழுவினாலான தவறுகள்*

**44.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுகின்றவிடத்து, அப்போது அவ்வாட்கள் குழு -

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது வேறு பிரதான அலுவலரும்; அத்துடன்

(ஆ) குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அத்துடன்

(இ) கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் கட்டுப்படுத்தும் உறுப்பினராகவுள்ள தனியாள் ஒவ்வொருவரும் மற்றும்

அக்குழுவின் முகாமை மற்றும் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள அக்குழுவின் ஒவ்வொரு பிரதான அலுவலரும்,

தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய ஆள் எவரும் அத்தவறு அவரை அறியாமல் புரியப்பட்டது என அல்லது அத்தவறுபுரியப் படுவதனை தடுப்பதற்கான எல்லா உரிய விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின் தவறொன்றைப் புரிகின்றார் எனக் கருதப்படுதலாகாது.

வழக்கிலிருந்தான பாதுகாப்பு

**45.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நல்லெண்ணத்தில் செய்யப்படுகின்ற அல்லது செய்யாதுவிடப்படுகின்ற ஏதேனும் செயலுக்கு ஆணைக்குழுவுக்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், பணியாட்டொகுதியினர் அல்லது 33 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிபுணர் ஒருவரினால் நல்லெண்ணத்தில் செய்யப் படுகின்ற அல்லது செய்யாதுவிடப்படுகின்ற ஏதேனும் செயலுக்கு அவர்களுக்கெதிராக,

துடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஆணைக்குழுவினால் அல்லது அதற்கெதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் ஆகுசெலவுகள் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பின்மீது ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது பணியாட் தொகுதியினரால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவிசெய்யும் நிபுணர் ஒருவரினால் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக்கு எதிராக கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், நீதிமன்றமானது அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது எனக் கூறின், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலேயொழிய ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் ஆண்டறிக்கைகள்

**46.** (1) ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அவ்வாண்டின் போதான அதன் செயற்பாடுகள் மற்றும் அடுத்துவரும் ஆண்டில் அதன் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாண்டுக்கான ஆணைக் குழுவின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரதி யொன்றுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்கு அனுப்புதலும் வேண்டும்.

(2) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றைப் பெறுவதன்மீது -

(அ) அத்தகைய அறிக்கையின் பிரதியொன்று பாராளுமன் றத்தின் முன்னர் இடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய அறிக்கையிலிருந்து எழும் ஏதேனும் கருமத்தை பாராளுமன்றத்துக்கு அல்லது பாராளுமன் றக் குழுவொன்றுக்கு தெளிவுபடுத்துமாறு ஆணைக் குழுவின் உறுப்பினர்களைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன்

(இ) ஆணைக்குழு தோதானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் அத்தகைய அறிக்கையையும் கணக்குகளையும் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு அவற்றை வெளியிடுமாறு ஆணைக்குழுவைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி ஒவ்வொரு ஆண்டறிக்கையும் பின்வருவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) ஆணைக்குழுவின் பணியின் நோக்கெல்லையினுள் வருகின்ற கருமங்கள் தொடர்பிலும் குறிப்பாக நிகழ்நிலைக் காப்பை உறுதிப்படுத்தல் தொடர்பிலும், எந்த ஆண்டுக்கு அறிக்கை தொடர்புபடுகின்றதோ அந்த ஆண்டின் போதான அபிவிருத்திகள் பற்றிய ஒரு பொது ஆய்வு; அத்துடன்

(ஆ) அவ்வாண்டின்போது நிகழ்நிலைக் காப்பை உறுதிப் படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றிய விபரங்கள்.

ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பணியாட் டொகுதியினர் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்

**47.** ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் பணியாட் டொகுதியினரும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழு வானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கத்துக்காக அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்

**48.** ஆணைக்குழுவானது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தினுள் அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஆணைக்குழு விதிகளை ஆக்குதல் வேண்டும்

**49.** (1) ஆணைக்குழுவானது பின்வரும் கருமங்கள் பற்றிய நோக்கத்துக்காக விதிகளை ஆக்குதல் வேண்டும் -

(அ) இணைய அடிப்படையிலான தொடர்பாடல் சேவைகளை வழங்குகின்ற இணையச் சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கு ஏற்புடையற்பாலனவான செயல்முறைக் கோவைகளை, அவர்களால் பின்பற்றப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட பாதுகாப்பு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கை முறைகளைக் குறித்துரைத்து வழங்குதலும்; அத்துடன்

(ஆ) இலங்கையில் உள்ள இறுதிப்பயனர்களுக்கு சமூக ஊடகத்தளங்களை வழங்குகின்ற இணையத்தளங்கள் இச்சட்டத்தின்கீழ் எந்த முறையில் பதிவுசெய்யப்பட வேண்டுமோ அந்த முறையைக் குறித்துரைத்தலும்.

(2) ஆணைக்குழுவானது, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இருபத்து நான்கு மாதங்களினுள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் முதலாவது விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிகளை ஆக்குவதற்கு முன்னர் இரண்டு வாரங்களுக்கு குறையாத காலப்பகுதியொன்றிற்கு பகிரங்க கலந்தாலோசனைகளை நடாத்துதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்க கலந்தாலோசனைக் காலப்பகுதி ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மேலதிக காலப்பகுதியொன்றிக்கு நீடிக்கப்படலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட ஏதேனும் விதி ஆனால் அதன்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறும் வகையில் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**50.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று அவ்வாறு ஒழிக்கப் பட்டதாக கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

இச்சட்டம் எழுத்திலான வேறு சட்டத்திலும் பார்க்க மேலோங்கி நிற்றல் வேண்டும்

**51.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்

**52.** (1) இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினாலொழிய -

"தன்னியக்கச் செய்நிரல்" என்பது, தன்னியக்கப் பணிகளை நடாத்தும் நோக்கத்துக்காக ஆக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட கணினி நிகழ்ச்சித்திட்டமொன்று எனப் பொருள்படும்;

"தவிசாளர்" என்பது, 8 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் பிரதித் தவிசாளரையும் உள்ளடக்கும்;

"சிறுவர்" என்பது, பதினெட்டு வயதிற்குக் கீழான ஆளொருவர் எனப் பொருள்படும்;

"ஒருங்கிணைக்கப்பட்ட மெய்யுறுதிப்படுத்தப்படாத நடத்தை" என்பது, ஏதேனும் விடயம் தொடர்பில் ஏதேனும் இணைய இடையீட்டாளர் சேவையின் இலங்கையிலுள்ள இறுதிப் பயனர்களை பிழைவழியுய்ப்பதற்கென, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்நிலை கணக்குகளைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படும் ஏதேனும் ஒருங்கிணைக் கப்பட்ட செயற்பாடு எனப் பொருள்படும் ஆனால் -

(அ) அதே ஆளினால் கட்டுப்படுத்தப்படும்; அத்துடன்

(ஆ) எந்த நிகழ்நிலை கணக்குகள் எதுவும் மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலை கணக்காகவில்லையோ அல்லது தன்னியக்கச் செய்நிரல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினால் கட்டுப் படுத்தப்படுவதில்லையோ அந்த,

நிகழ்நிலை கணக்குகளை பயன்படுத்தி நிறைவேற்றப் படும் ஏதேனும் செயற்பாட்டைத் தவிர்க்கும்;

"அறிவித்தல்" என்பது, இணையத்தின் மீது அல்லது இணையத்தினூடாக இலங்கையில் உள்ள ஒன்று அல்லது

அதற்கு மேற்பட்ட இறுதிப் பயனர்களுக்கு பொய்யான கூற்றொன்றை அல்லது தனிப்பட்ட தகவலை அறிவித்தல் எனப் பொருள்படும் என்பதுடன் அனுப்புதல், விநியோகித்தல், பகிர்தல், பிறப்பித்தல், பரப்புதல், வெளியிடுதல் அல்லது இணைத்தலை உள்ளடக்கும்; அத்துடன் "தொடர்பாடல்" என்னும் பதம் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்;

"கணினி" என்பது தகவல் செய்முறைப்படுத்தும் ஆற்றல்களைக் கொண்ட இலத்திரனியல் அல்லது அதனையொத்த சாதனம் எனப்பொருள்படும்;

"கணினி முறைமை" என்பது இணையம் உட்பட ஒரு கணினி அல்லது இடைத்தொடுத்த கணினிகள் குழு ஒன்று எனப் பொருள்படும்;

"வெளிப்படுத்தப்பட்ட நிகழ்நிலை அமைவிடம்" என்பது, 28 ஆம் பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்நிலை அமைவிடம் எனப் பொருள்படும்;

"பொய்யான கூற்று" என்பது, பிழையானது அல்லது உண்மை யற்றது என அதன் ஆக்குநரினால் அறியப்படுகின்ற அல்லது நம்பப்படுகின்ற அத்துடன் ஏமாற்றும் அல்லது பிழைவழியுய்க்கும் உளக்கருத்துடன் விசேடமாகச் செய்யப்பட்ட ஒரு கூற்று எனப் பொருள்படும், ஆனால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட ஒரு எச்சரிக்கை, ஒரு அபிப்பிராயம் அல்லது ஏற்றிக்கூறுகையை உள்ளடக் காது;

"மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்கு" என்பது, நிகழ்நிலை கணக்கொன்றை வைத்திருப்பவராக (அதன் பயனர், தனித்துவமான அடையாளங்காணி அல்லது வேறு தகவல் மூலமாகவும் சரி) பிரதிநிதித்துவப்படுத்தும்

ஆள் தவிர்ந்த ஆள் ஒருவரினால் கட்டுப்படுத்தப் படுகின்றதும் அப்பிரதிநிதித்துவம், கணக்கை வைத்திருப் பவரின் ஆளடையாளம் பற்றி ஏதேனும் இணைய இடையீட்டாளர் சேவையின் இலங்கையிலுள்ள இறுதிப் பயனர்களை பிழைவழியுய்க்கும் நோக்கத்துக்காக ஆக்கப் படுகின்றதுமான நிகழ்நிலை கணக்கொன்று எனப் பொருள்படும்;

''இணைய அணுக்கச் சேவை வழங்குநர்'' என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குவோருட்பட, அனுப்பப்பட்டவாறான அல்லது பெறப்பட்டவாறான விடயத்தின் உள்ளீட்டுக்கான திரிபின்றி பயனர் ஒருவரின் தெரிவுசெய்யப்பட்ட விடயத்தினதாக அப்பயனரினால் குறித்துரைக்கப்பட்ட புள்ளிகளுக்கிடையில் அல்லது அவற்றிற்கு மத்தியில் எண்ணிம நிகழ்நிலை தொடர்பாடல்களுக்கான கடத்தலை முனைகின்ற, மார்க்கமளிக்கின்ற அல்லது தொடர்புகளை வழங்குகின்ற உருவகமொன்று எனப் பொருள்படும்;

''இணைய இடையீட்டாளர்'' என்பது, ஏதேனும் இணைய இடையீட்டாளர் சேவையை வழங்குகின்ற ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

''இணைய இடையீட்டாளர் சேவை'' என்பது -

(அ) இணையத்தின்மீது அல்லது இணையத்தின் ஊடாக மூன்றாம் திறத்தவர்களிடமிருந்து உருவாகும் விடயங்களை அணுகுவதற்கு இறுதிப் பயனர்களை அனுமதிக்கின்ற ஒரு சேவை;

(ஆ) அத்தகைய விடயங்களை இணையத்தின்மீது அல்லது இணையத்தினூடாக இறுதிப் பயனர்களுக்கு அனுப்பும் ஒரு சேவை; அல்லது

(இ) நிகழ்நிலை தேடுகையொன்றை அல்லது தேடுகை பெறுபேறுகளின் சுட்டியொன்றை செய்வதற்கு சேவையைப் பயன்படுத்துகின்ற இறுதிப்பயனர் ஒருவருக்கு காட்சிப்படுத்தப் படும் ஒரு சேவை எனப்பொருள்படும்; அவற் றின் ஒவ்வொன்றும் தேடுகைப் பெறுபேறுகள் சுட்டியின் அமைவிடத்திலிருந்து தனிவேறான அமைவிடம் ஒன்றில் தொகுத்தளிக்கப்பட்ட அல்லது தேக்கிவைக்கப்பட்ட உள்ளீட்டுக்கு அவ்விறுதிப் பயனரை இணைக்கும்; அல்லது

(ஈ) இணைய அடிப்படையிலான சேவை வழிகளி னூடாக, நிகழ்நிலை அமைவிடங்களின் சொந் தக்காரர்களுக்கு அலல்து தொழிற்படுத்து நர்களுக்கு மற்றும் விளம்பரப்படுத்துநர்களுக் கும் இணையச் சேவை வழங்குநர்களுக்கும் இடையேயான இணைப்பாக அல்லது இணைப் பின் பாகமாகச் செயலாற்றுவதன் மூலம் ஏதேனும் இடத்தில் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீட்டை அறிவிப்பதனை வசதிப்படுத்து கின்ற ஒரு சேவை எனப் பொருள்படும்,

ஆனால் இணைய அல்லது கணினி வளச்சேவைக்கான பொது அணுக்கத்தை வழங்கும் சேவையொன்றை வழங்கும் நோக் கத்துக்காக அல்லது அதற்கு இடைநேர்விளைவாக செய்யப்பட்ட ஏதேனும் செயலைத் தவிர்க்கும்;

''விடயம்'' என்பது, கூற்றொன்றை கொண்டுள்ள அல்லது அடக்கியுள்ள, ஏதேனும் விடயம் எனப் பொருள்படும்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 44 அல்லது 45 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி எந்த அமைச்சருக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிக்கும் பணி குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

''நிகழ்நிலைக் கணக்கு'' என்பது, இணைய இடையீட்டாளர் சேவையொன்றை பயன்படுத்துவதற்காக இணைய இடையீட்டாளரொருவருடன் உருவாக்கப்பட்ட கணக்கொன்று எனப் பொருள்படும்;

''நிகழ்நிலை அமைவிடம்'' என்பது, ஏதேனும் இணையத்தளம், இணையப்பக்கம், அரட்டையறை அல்லது அரங்கு அல்லது கணினி ஒன்றின் மீது தொகுத்தளிக்கப் படுகின்றதும் இணைய வழிவகைகள் மூலம் பார்க்கப்பட முடியுமானதும் கேட்கப்படமுடியுமானதும் அல்லது வேறு வகையாக உய்த்தறியப்படக்கூடியதுமான வேறு ஏதேனும் காரியம் எனப் பொருள்படும்;

''கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீடு'' என்பது, பிரதிபயனொன்று கொடுப்பனவு செய்யப்பட்டதன்மேல் ஏதேனும் இடத்தில் அறிவிக்கப்படுகின்ற ஏதேனும் கூற்று எனப் பொருள்படும்;

''தண்டனைச் சட்டக்கோவை'' என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை எனப் பொருள்படும்;

''ஆள்'' என்பது, இயற்கையான அல்லது சட்ட ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது, ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும்;

''தடைசெய்யப்பட்ட கூற்று'' என்பது 12,13,14,15,16,17, 19 அல்லது 20 அல்லது 23 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு கூற்று எனப் பொருள்படும்.

''வெளியிடுதல்'' என்பது, இணையத்தின் மீது அல்லது இணையத்தினூடாக பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய தாக்குதல் எனப் பொருள்படும்;

''சமூக ஊடகத் தளம்'' என்பது-

(அ) இலங்கையில் உள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இறுதிப்பயனர்களுக்கிடையில்

நிகழ்நிலை சமூக இடைச்செயலாற்றுகையை இயலச் செய்யும் நோக்கத்துக்காக மட்டும்;

(ஆ) இலங்கையில் உள்ள இறுதிப்பயனர்களை வேறு இறுதிப்பயனர்களுள் சிலருடன் அல்லது அவர்கள் எல்லோருடனும் இணைப்பதற்கு அனுமதிக்கின்ற; அல்லது

(இ) இலங்கையில் உள்ள இறுதிப்பயனர்களை சேவையின் மீது விடயத்தை பதிவிடுவதற்கு அனுமதிக்கின்ற, இணைய இடையீட்டாளர் ஒருவரினால் வழங்கப்படும் ஒரு சேவை எனப்பொருள்படும்,

ஆனால் இலங்கையில் உள்ள இறுதிப்பயனர்களினால் அணுகத் தக்கதாகவிராத, சேவையினூடாக அறிவிக்கப்பட்ட ஏதேனும் தகவலைக் கொண்ட அத்தகைய ஏதேனும் சேவையை உள்ளடக் காது;

"கூற்று" என்பது, சொற்சுருக்கம் மற்றும் முதலெழுத்து, இலக்கம், படம் (அசையும் அல்லது வேறுவகையாக) ஒலி, சின்னம் அல்லது வேறு பிரதிநிதித்துவம் அல்லது இவற்றின் ஏதேனும் சேர்க்கையொன்று உட்பட ஏதேனும் சொல் எனப் பொருள்படும்.

(2) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டதும் தண்டனைச் சட்டக் கோவையில் வரைவிலக்கணங்கூறப்பட்டதும் ஆனால், இச்சட்டத் தில் வரைவிலக்கணங்கூறப்படாததுமான ஏதேனும் சொல் அல்லது சொல்லமைப்பு, தண்டனைச் சட்டக்கோவையில் அத்தகைய சொல்லுக்கு அல்லது சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**53.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** [*பிரிவு 21(1)*]

| *தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு* | *தண்டனைச் சட்டக் கோவையின் கீழான தவறு* | *தண்டனை* |
|---|---|---|
| *286அ* | *சிறுவர்கள் தொடர்பிலான ஆபாசமான வெளியீடு முதலியன* | *இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான காலமொன்றிற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம்* |
| *288* | *சிறுபிள்ளையை யாசகம் செய்வித்தல் அல்லது கூட்டுவித்தல்* | *ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாகலாம்* |
| *288அ* | *பாலியல் உடலுறவுக்குக் கூட்டிவிடுபவர்களாகச் செயலாற்றுவதற்கு சிறு பிள்ளைகளை வாடகைக்கு விடுதல் அல்லது தொழிலுக் கமர்த்துதல்* | *இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்* |
| *288ஆ* | *மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களில் வியாபாரம் செய்வதற்கு சிறு பிள்ளைகளை வாடகைக்கு விடுதல் அல்லது தொழிலுக் கமர்த்துதல்* | *ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்* |
| *308அ* | *பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தல்* | *இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு* |

| | | |
|---|---|---|
| | | இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படலாம் என்பதுடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படலாம் |
| 360அ | கூட்டிவிடுதல் | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 360ஆ | சிறுபிள்ளை விபச்சாரம் | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 360இ | விலைப்படுத்துதல் | மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை |

| | | |
|---|---|---|
| | | அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 363 | கற்பழிப்பு | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படுதல் வேண்டும் அத்துடன் நட்டஈடு செலுத்தத் தவறும் விடயத்தில் இரண்டு ஆண்டுகள் வரையிலான மேலதிக மறியற்றண்டனைக் காலமும் |
| | கற்பழிப்பு<br><br>(அ) பகிரங்க அலுவலர் ஒருவர் அவரது கட்டுக்காப்பில் உள்ள பெண் மீது புரிதல்<br><br>(ஆ) ஆளொருவர் ஒரு விளக்கமறியல் வீட்டில், பெண்கள் அல்லது சிறு பிள்ளைகள் நிறுவனம் முதலியவற்றின் | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு |

| | | |
|---|---|---|
| | முகாமையில் அல்லது பணியாட்டொகுதி யில் இருந்து கொண்டு அங்கு உள்ளுறையும் பெண்கள்மீது புரிதல்<br><br>(இ) ஒரு வைத்திய சாலையின் முகாமை அல்லது பணியாட்டொகுதியில் உள்ள ஆளொருவர் அந்த வைத்திய சாலையில் உள்ள ஒரு பெண்மீது புரிதல்<br><br>(ஈ) கர்ப்பிணிப் பெண் மீது புரிதல்<br><br>(உ) பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்மீது புரிதல்<br><br>(ஊ) உள அல்லது உடல் இயலாமைக்குட்பட்ட பெண்மீது புரிதல்<br><br>(எ) ஆட்கள் கூட்டத் தினரால் புரிதல் | விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்துடன் நட்டஈடு செலுத்தத் தவறும் விடயத்தில் இரண்டு ஆண்டுகள் வரையிலான மேலதிக மறியற்றண்டனைக் காலமும் |
| | பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்மீது அத்தகைய பெண் அவ்வாள் தொடர்பாக 364அ என்னும் பிரிவில் எடுத்துக்கூறப்பட்ட ஏதேனும் உறவு முறையில் இருக்கின்ற விடத்து | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும் |

| | | |
|---|---|---|
| 364அ | முறையில்லாப் புணர்ச்சி | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும் |
| 365 | இயற்கைக்கு விரோதமான தவறு | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கும் கட்டளையிடப்படுதல் வேண்டும் |
| 365அ | ஆட்களுக்கிடையில் மிக்க இழிவான செயல்கள் | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படுதல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| 365 ஆ | பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கும் கட்டளையிடப்படுதல் வேண்டும். |

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*